Registered as a News Paper in Sri Lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 31 வெள்ளிக்கிழமை (17.10.2014) பக்கங்கள் 20 ஓசை – 017

## தடையை நீக்கியது ஐரோப்பிய ஒன்றியம்

புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றம் நீக்கி தீர்ப்பளித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் பிரிவானது ஐரோப்பிய ஒன்றியம் விதித்த தடையை எதிர்த்து 2011இல் லக்சம்பர்க்கில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் சார்பாக நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த வழக்குரைஞர் விக்டர் கோப் ஆஜராகி வாதாடி வந்தார். இந்த வழக்கில் கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் விசாரணை நடைபெற்று வந்தது.

இந்த விசாரணையின் போது, 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்தவில்லை. தங்களது மக்களுக்காக வன்முறையற்ற வழிகளில்தான் விடுதலைப் புலிகள் போராட விரும்புகின்றனர் என்று வாதிடப்பட்டது.

இதனால் இந்த வழக்கில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் தடையை நீக்கினால் ஐரோப்பிய தமிழர்களுக்கு ஆபத்து

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் ஐரோப்பாவில் வாழும் இலங்கையர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்பட்டமை குறித்து இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

புலிகளுக்கு எதிரான தடையை ஐரோப்பிய ஒன்றியம் நீக்கியமை உள்ளக தீர்மானமாக இருக்கக் கூடுமென தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு இந்த விடயம் குறித்து ஐரோப்பிய ஒன்றியம் சிறந்த தீர்வு ஒன்றை வழங்கும் என எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கொடூர பயங்கரவாத அமைப்பு என தெரிவித்துள்ள இலங்கை, பயங்கரவாத பட்டியலில் விடுதலைப்புலிகள் இணைக்கப்படுவதற்கு பூரண ஆதவரளிக்கப்படும் என குறிப்பிட்டுள்ளது.

இந்த வகையில் புலிகள் இயக்கத்தை தொடர்ந்தும்தடை செய்யப்பட்ட இயக்கமாக அறிவிப்பதற்கு தேவையான உதவிக

(19) ஆம் பக்கம் பார்க்க

# வடக்கு அதிவேக வீதி நிர்மாணம் அடுத்த மாதம்




வரலாற்றிலேயே அதிகூடுதலான முதலீடான 300 முதல் 350 பில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படும் வடபகுதிக்கான அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணிகள் அடுத்த மாதம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படவுள்ளது.

வடக்கு அதிவேக நெடுஞ்சாலையின் முதலாம் கட்டம் 4 வருடங்களில் நிறைவு செய்யப்படவிருப்பதாகவும் இதனூடாக கண்டிக்கும், தம்புள்ளவுக்கும் 11/4 மணி நேரத்தில் பயணிக்க முடியும் என பெருந்தெருக்கள் திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல தெரிவித்தார்.

வடக்கு அதிவேகப்பாதை திட்டம் குறித்து விளக்கமளிக்கும் ஊடக மாநாடு நேற்று முன்தினம் பெருந்தெருக்கள் அமைச்சில் நடைபெற்றது. மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர்,பல வருட திட்டத்தின் பின்னர் வடக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## பறங்கி ஆற்றுத்திட்டம் அமுல் செய்ய ஜனாதிபதி அனுமதி

மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பறங்கியாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு உடனடியாக தனக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார் என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் தயானந்தன் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி மற்றும் யாழ். மாவட்டங்களில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளிப்பதற்கு கடந்த திங்கட்கிழமை வடமாகாணத்துக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசுடன் ஒத்துழைக்க கூட்டமைப்பு முன்வரவேண்டும்

### இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆலோசனை

(கொழும்பு)

யுத்தத்துக்குப்பிந்திய இலங்கையில் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வையும் இன நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு இலங்கை அரசு மட்டுமல்ல தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு உட்பட எதிர்க்கட்சிகளும் பொறுப்புணர்வுடனும் ஒத்துழைப்புடனும் செயற்படவேண்டும் என்று இந்திய செய்தி ஊடகம் ஒன்று ஆலோசனை முன்வைத்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர், நிரந்தரத் தீர்வு இலங்கையின் வடக்கில் தானாக ஏற்பட்டுவிடும் என கருத முடியாது என்று இந்தியாவின் ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் முடிவுற்ற யுத்தம் தொடர்பில் த இந்தியன்

(19) ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இராணுவத் தளபதி விரைவில் கொழும்புக்கு

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தால்பீர் சிங் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளார். கடந்த ஜூலை மாதம் 31ஆம் திக்தி ஜெனரல் தால்பீர் இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

அடுத்த ஆண்டில் தால்பீர் இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இராணுவத்தளபதியாக நியமிக்கப்பட்டதன் பின்னர் அண்டை நாடுகளுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களின் ஓர் கட்டமாக தால்பீர் இலங்கை

(19) ஆம் பக்கம் பார்க்க

## கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் மீது கல் வீச்சு

பயணிகளுடன் கொழும்பு நோக்கிச் சென்ற பஸ் கல்வீச்சு தாக்குதலுக்குள்ளாகி கண்ணாடிகள் முழு சேதமடைந்தன.

இச்சம்பவம் நேற்று இரவு செம்மணி வீதி யாழ். வளைவுக்கு அருகில் இடம் பெற்றது.

மேற்படி சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

வடபிராந்திய போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நேற்று இரவு 8.30 மணியளவில் பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழிலிருந்து கொழும்புக்கான பயணத்தை ஆரம்பித்தது.

செம்மணி

(19) ஆம் பக்கம் பார்க்க




## விமானத்தில் வேலை செய்ய விருப்பமா?



இது ஒரு அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் விமான நிலையம் (தனியார்) பகுதிக்கு சுத்திகரிப்பாளர், பாதுகாப்பாளர், பெக்கிங் 18-55 வயதான ஆண், பெண் தேவை சம்பளம் 18,000-35,000 வரை தங்குமிடம் உணவு, பயிற்சி வழங்கப்படும் (சிங்களம் அவசியமில்லை) வேலை தேடி அங்கும் இங்கும் அலையாமல் இன்றே அழையுங்கள் 0766398366.

(C/3775)

## அனலைதீவு பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத போட்டிகள்

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கு நடத்தப்படும் போட்டிகள் நாளை மாலை 3.00 மணி தொடக்கம் பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே விண்ணப்பித்த மாணவர்கள், குறித்த நேரத்திற்கு சமூகமளித்து போட்டிகளில் பங்குபற்றுமாறும், இது தொடர்பான விபரங்கள் ஏற்கனவே பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நூலக சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

## துரையப்பா விளையாட்டரங்கு பாவனை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட துரையப்பா விளையாட்டரங்கானது இன்று முதல் ஒன்பது மாதங்களுக்கு புனரமைப்பு வேலைகளுக்காக ஒப்பந்தகாரருக்கு தற்காலிகமாக கையளிக்கப்பட்டுள்ளது.

எனவே இக்குறிப்பிட்ட காலத்தில் எவ்விதமான நிகழ்வுகளையும் நடத்துவதற்கு அனுமதி வழங்க முடியாது என யாழ்.மாநகரசபை ஆணை யாளர் அறிவித்துள்ளார்.


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக் இடமாற்றம்**

இல.108 பலாலி வீதி
யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)
021 222 8680,
077 592 5088. (C/3800)


### சமுர்த்தி பயனாளிகளுக்கு இன்று பணக்கொடுப்பனவு

சாவகச்சேரி ஜே/305 கல்வயல் கிராம சமுர்த்தி பயனாளிகளுக்கான பணக்கொடுப்பனவு இன்று வழங்கப்படும் என சமுர்த்தி அலுவலர் சி.சிவகணநாதன் அறிவித்துள்ளார்.

இன்று காலை 10.00 மணி முதல் ஒரு மணி வரை இக் கொடுப்பனவு வழங்கப்படும். (இ)

# வடக்கின் அபிவிருத்தியை கூட்டமைப்பு விரும்பவில்லை

### வலி.கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



(அச்சுவேலி)

அச்சுவேலி, பத்தமேனி இளங்கதிர் சனசமூக நிலையத்தின் 52 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், விளையாட்டு விழா நிகழ்வும் சனசமூக நிலையத் தலைவர் கு.சூரியபிரதாஸ் தலைமையில் அண்மையில இடம்பெற்றது.

வலி.கிழக்கு பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வலி.கிழக்கு பிரதேச இணைப்பாளருமான இராமநாதன் ஐங்கரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் நடைபெறும் அபிவிருத்தியை விரும்பவில்லை எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அவர்மேலும் தெரிவிக்கையில், எமது மக்களிற்கு கிடைக்கின்ற அபிவிருத்திகளை விரும்பாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விமர்சனம் செய்வதென்பது சூரியனையோ, சந்திரனையோ பார்த்து நாய்கள் குரைப்பதைப் போன்றது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினுடைய இணக்க அரசியலின் வெளிப்பாடே கடந்த 24 வருடங்களிற்குப் பின் யாழ்தேவி புகையிரதம் தற்பொழுது யாழ் நோக்கி வந்திருக்கின்றது. ஆகவே எதிர்ப்பு அரசியல் ஊடாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதனைச் சாதித்திருக்கின்றார்கள் என்பதை மக்களிற்கு பகிரங்கமாகக் கூற முன் வருவார்களா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் எதிர்ப்பு அரசியல் ஊடாக பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், அழிவையுமே பெற்றுக் கொள்ள முடிந்தது ஆனால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினுடைய இணக்க அரசியல் ஊடாக மின்சார அபிவிருத்திகள், வீதி அபிவிருத்திகள், உள்கட்டுமான அபிவிருத்திகள் யாழ்தேவி புகையிரத சேவைகள், போக்குவரத்து சேவைகள் என்பனவற்றை எமது மக்களிற்கு பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விமர்சிப்பதற்கு எந்தவித தகுதியும் இல்லை என்பதை நீங்கள் அனைவரும் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பொய்த் தேசியத்தை நம்பாது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கரங்களைப் பலப்படுத்தி உங்களுடைய அபிவிருத்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில், யா/இடைக்காடு மகா வித்தியாலய அதிபர் அ.அருந்தவனேசன், யா/பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலய அதிபர் இ.இரவிச்சந்திரன், அச்சுவேலி பொலிஸ் பொறுப்பதிகாரி சம்மந்த் ஜயசிங்க மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அணிகளுக்கான புகைப்படம் - 2014**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டு அவைக்கான 2014 ஆம் ஆண்டுக்கான புகைப்படங்கள் 18.10.2014 (சனிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விளையாட்டு அணி மற்றும் விளையாட்டு அவை அங்கத்தவர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

பதிவாளர், (C/3565)


## பாராட்டு விழா

(வேலணை)

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய பாராட்டுவிழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் திருமதி பு.இராசநாயகம் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக தீவக வலயக்கல்விப்பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரன்ஸ், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேசசபைத் தவிசாளர் சின்னையா சிவராசா, ஆரம்பக் கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் அ.தனிநாயகம், கனடாவைச் சேர்ந்த சை.செல்வராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர். (21)

## ஆசிரியர் தின விழா

யாழ்.இந்துக் கல்லூரியில் ஆசிரியர் தின விழா இன்று குமாரசாமி மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு மாணவர் மன்றத் தலைவர் ட.டிலக்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்வரவேற்புரையை மாணவன் இ.சங்கீர்தனும், ஏற்புரையை ஆசிரியர் ந.மகேஸ்வனும் நிகழ்த்தவுள்ளார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகளும், ஆசிரியர்களின் நாடகமும், ஆசிரியர், மாணவர்கள் இணைந்து நடத்தும் இசை நிகழ்வும் இடம் பெறும். (48)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

(C/3577)

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2572 திகதி 15-10-2014

ஆங்கில எழுத்து: L

வெற்றி எண்கள்: 26 57 58 67

போனஸ் இல: 38

ஜக்பொட் பரிசு ரூ.12,599,850/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 230281 | 20/- | 4,605,620/- |
| 2 இல | 16511 | 100/- | 1,651,100/- |
| 3 இல | 350 | 1,000/- | 350,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9388 | 40/- | 375,520/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 625 | 1,000/- | 625,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 16 | 10,000/- | 160,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,599,850/- | - |
| 1 இல + போனஸ் இல | 10968 | 100/- | 1,096,800/- |
| 2 இல + போனஸ் இல | 518 | 500/- | 259,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 478 | 200/- | 95,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 22 | 1,500/- | 33,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 269164 | | 10,851,640/- |

பச்சை நிற டிக்கட்டுகள் 2014.10.18 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 13,228,825/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/3531)


## மாடு வெட்டியவர் கைது



(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக இறைச்சிக்காக மாட்டை வெட்டிய நபர் ஒருவரை யாழ். விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் இறைச்சியுடன் கைது செய்துள்ளனர்.

நேற்றுக்காலை ஐந்து சந்திப் பகுதியில் விசேட பொலிஸ் பிரிவினரால் யாழ். கொன்வென்ற் வீதியைச் சேர்ந்த நபரைக் கையும் மெய்யுமாக சட்டவிரோதமாக வெட்டிய 70 கிலோ மாட்டின் இறைச்சியுடன் கைது செய்ததுடன், 70 கிலோ மாட்டிறைச்சியையும் மீட்டுள்ளதுடன் அனுமதியற்ற முறையில் வெட்டுவதற்காக கொண்டு வரப்பட்டிருந்த மாடு ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைதான நபர் நேற்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். (இ,25)

## பரிசளிப்பு விழா

இணுவில் மத்திய கல்லூரியின் 150 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழா நிகழ்வும் நாளை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் அதிபர் மு.செல்வந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திருமதி நீலலோயினி ஜெகதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.தர்மலிங்கமும், கௌரவ விருந்தினர்களாக இந்துவின் மைந்தர்களான ஓய்வுபெற்ற இறப்பர் உற்பத்தி தொழிற்சாலையின் அதிகாரி த.பராபரன், பழைய மாணவர் சங்கத் தலைவர் ஞா.திருக்கேதீஸ்வரன், யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் பேராசிரியர் ப.தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (66)

## பெர்லின் நினைவுகள் நூல் வெளியீட்டு விழா

யாழ்.இலக்கியக் குவியத்தின் ஏற்பாட்டில் பொ.கருணாகரமூர்த்தியின் பெர்லின் நினைவுகள், அனந்தியின் டயறி ஆகிய இரண்டு நூல்கள் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் இ.செல்வரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூல் அறிமுகவுரைகளை சு. குணேஸவரன், கருணாகரன் ஆகியோரும் மதிப்பீட்டுரைகளை நிலாந்தன், சட்டநாதன் ஆகியோரும் வெளியீட்டுரைகளை இ.து.குலசிங்கம், பேராசிரியர் தி.வேல்நம்பி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையை பொ.கருணாகரமூர்த்தியும் நன்றியுரையை வேலணையூர் தாஸ் ஆகியோரும் நிகழ்த்துவர் (90)

# கருணை நிறைந்த அன்பினால் சமாதானம் நிலவ வழிவகுப்போம்

## சத்தியசாயி நிறுவன இணைப்புக்குழு தெரிவிப்பு

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள ஏழு நாட்களையும் புனிதமான கருணை நிறைந்த அன்பு வாரமாக கொண்டாடி நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலவ வழிவகுப்போம் என்று வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்புக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அன்பு வாரத்தில் பாடசாலைகளில் அதிபர் அல்லது ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு பிரார்த்தனை முடிவில் அன்பு பற்றி ஓர் உரை நிகழ்த்துமாறும், மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, சித்திரப் போட்டிகளை நடாத்தி சிறந்த ஆக்கங்களைப் படைக்கும் மாணவர்களுக்கு பரிசில் வழங்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களது ஆக்கங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி இணைப்பாளர் சாயி தர்சன், கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும் எனவும், மேலதிக தகவல்களை 021 222 6019 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (10)

# யாழ். வலய மட்ட பாடசாலைகளின் விஞ்ஞான வினா விடை போட்டிகள்

(அச்சுவேலி)

கடந்த மாதம் 20 ஆம் திகதி நடாத்தப்படவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டிருந்த யாழ்ப்பாண கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட விஞ்ஞான வினா விடைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை திட்டமிட்டபடி நடைபெறுமென யாழ்ப்பாண வலய விஞ்ஞான பிரிவிற்கான உதவிக் கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தரம் 06 முதல் 11 வரையான வகுப்பு மாணவர்களுக்கு நடாத்தப்படும் தமிழ் மொழி மூலமான போட்டிகள் நாளை காலை 09.00 மணிக்கு ஆரம்பமாகி முற்பகல் 11.30 மணி வரை நடைபெறும். யாழ்ப்பாணக் கோட்டப் பாட சாலைகளுக்கான போட்டிகள் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும், நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியிலும், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறும். தரம் 6, 7, 8, 9 வகுப்புக்களுக்கான போட்டிகள் காலை 09.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையும், 10,11 வகுப்புகளுக் கான போட்டிகள் 10.00 மணி தொடக்கம் 11.30 மணிவரையும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அனைத்து வகுப்புக்களுக்குமான ஆங்கில மொழி மூலமான போட்டிகள் யாவும் அன்றைய தினம் காலை 09.00 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் நடைபெற இருப்பதால் போட்டியில் பங்கு பற்றும் அனைத்து மாணவர்களையும் தமது பொறுப்பாசிரியர்களுடன் உரிய நேரத்திற்கு முன்னதாக தமக்குரிய போட்டிகள் நடைபெறும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்குமாறும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

## விழிப்புணர்வு செயலமர்வு

கட்டாய வரவுக்குழு விழிப்புணர்வு செயலமர்வு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவில் நடைபெறவுள்ளது என வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ஏ.சந்திரராஜா தெரிவித்துள்ளார். இன்று காலை 8.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது எனவும் இவ்விழிப்புணர்வு செயலமர்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். (06)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மூத்த எழுத்தாளர் கவிஞர் சோ. பத்மநாதனின் கௌரவிப்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றபோது விருந்தினர்கள் அமர்ந்திருப்பதைக் காணலாம். (48)

# மண்டைதீவில் காலபோக நெற்செய்கை

(மண்டைதீவு)

மண்டைதீவுப் பகுதியில் காலபோக நெற்செய்கை 50 ஏக்கர் நிலப் பரப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். தற்சமயம் சுமார் 30 ஏக்கர் நிலரப்பரப்பில் விதைப்பு நடைபெற்றுள்ளதுடன் தொடர்ந்து 20 ஏக்கர் நிலத்தில் விதைப்பு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் அப்பகுதி விவசாய சம்மேளனத்தினால் விநியோகிக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டாக்காலி மாடுகளின் அச்சுறுத்தல் இருப்பதன் காரணமாக வயல் நிலங்கள் முட்கம்பியினால் வேலியிடப்பட்டு நெற்பயிர்கள் பராமரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பா)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் -08




'இலங்கை அரசாங்கத்தோட எப்பிடிப் பேசிறது? அதை நம்பலாமா? அதுக்கு என்ன உத்தரவாதம்? இனவாத அரசாங்கமாக இன்னும் இருக்கிற வரையில அதிட்ட இருந்து நீதியையோ, நியாயத்தையோ எதிர்பார்க்க முடியுமா? சிறுபான்மை மக்களின் மீது பகிரங்கமாகவே வன்முறையை ஏவிவிடுகிற அரசாங்கத்திட்ட நம்மட தலையைக் கொண்டுபோய் குடுக்க முடியுமா? கடந்த காலத்தில நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கெல்லாம் என்ன நடந்தது? அப்பிடியான அனுவத்தை வைச்சுக் கொண்டும் பிறகும் பிழை விடலாமா? சிங்களத் தரப்பின்ரை மனதிலயும் சிந்தனையிலையும் மாற்றங்கள் ஏற்படாத வரையில எப்பிடி அவர்களை நம்ப முடியும்? இன்னும் சிங்களவர்கள் தங்களை மேலாண்மையானவர்கள் எண்டுதானே கருதிக்கொண்டிருக்கினம்? இப்பிடியெல்லாம் நிலைமை இருக்கேக்க பேச்சுவார்த்தை எண்டும், அமைதித்தீர்வு எண்டும் நாங்கள் திரும்பவும் ஏமாறலாமா?'

– இப்பிடிக் கேள்விகளைக் கேட்கிற ஆட்கள்தான் நிறையப்பேர் இருக்கினம். மேலோட்டமாகப் பார்த்தால் இவை கேட்கிறது நியாயம் போலத்தான் படும். இலங்கை அரசாங்கத்தை எப்பிடி நம்பிறது? எண்டும் தோன்றும்.

ஆனால், நாங்கள் விரும்பினால் என்ன விரும்பாமல் விட்டால் என்ன, நம்பினாலென்ன நம்பாது விட்டாலென்ன, இலங்கை அரசாங்கத்தோடதான் பேசித் தீர்வைக் காண வேணும்.

இதுதான் உண்மை. இதுதான் யதார்த்தம். இதுதான் நடக்கப்போகுது. இதுதான் நடக்கவும் வேணும்.

இதை விட்டு வேற வழி கிடையாது.

அப்பிடியான வழியை இந்தியாவும் தரப்போறதில்லை. சர்வதேச சமூகமும் தராது. ஐ.நாவும் இதுக்கு மேல சிந்திக்காது எண்டு முதல் அத்தியாயங்களில வடிவாப் பார்த்திட்டம்.

ஆகவே, 'என்னதான் நடந்தாலும் இலங்கை அரசாங்கத்தோடதான் பேசவேணும்' எண்டது தவிர்க்க முடியாத ஒண்டு. இதுதான் உண்மை எண்டதும் மீண்டும் நிரூபிக்கப்படுகிறது.

அப்பிடியெண்டால், எப்பிடி இலங்கை அரசாங்கத்தோட பேசிறது?

இதுதான் பிரச்சினையே!

சிக்கலே இஞ்சதான் இருக்கு.

முந்தியும் முந்தியும் இதுதான் நடந்தது. இதை நாங்கள் ரண்டு விதமாகப் பார்க்க வேணும்.

ஒண்டு எப்பிடியெண்டால், 'இவ்வளவு காலமும் இலங்கை அரசாங்கத்தை ஏற்க முடியாது – அதோட பேச் ஏலாது. அதை நம்பேலாது எண்டெல்லாம் சொல்லிப்போட்டு, திடீரெண்டு அரசாங்கத்தோட பேசப்போறம் எண்டால்.... சனங்கள்தான் இதை ஏற்குமா? இலங்கை அரசாங்கம்தான் என்ன நினைக்கும்? ஏதோ தமிழ்த்தரப்புப் பலவீனப்பட்டிருக்கு எண்டல்லவா எண்ணும்' எண்டு தமிழ் அரசியல்வாதிகள் கனபேர் சிந்திக்கினம். சனங்களில ஒரு தரப்பு ஆட்களிட்டயும் இந்த மாதிரி ஒரு எண்ணம் இருக்கு. ஏன், அரசியல் ஆய்வாளர்களாகத் தங்களை எண்ணிக் கொண்டிருக்கிற ஆட்களிட்டயும் இப்பிடியான ஒரு நம்பிக்கை உண்டு.

ஆனால், இப்பிடிச் சிந்திச்சால்.... அரசியல்ல 'சென்ரி மென்ற்' பார்த்தால் அவிய வேண்டியதுதான்.

ஒரு நாளும் தமிழ்பேசும் மக்கள் இனப்பிரச்சினைக்கு மட்டுமில்லை, எந்தப் பிரச்சினைக்குமே தீர்வைக்காண முடியாது.

அரசியல் எண்டது வெற்றி தோல்விகளை எப்பவும் அப்பிடியே ஒரே மாதிரி வைச்சிருக்கிறதில்லை. அரசியல்ல ஆர் பெரிசு. ஆர் சிறிசு எண்டதும் இல்லை. அரசியல்ல எதிரியும் நண்பனும் நிரந்தரம் இல்லை. அரசியல் எண்டது சாணக்கியமும் தேவைகளை உணர்ந்த வகையில் தந்திரோபாயங்களும் நிறைந்தது.

அப்பிடியிருந்தால்தான் வெற்றிகளைப் பெறலாம். இல்லையெண்டால் என்னதான் முயற்சித்தாலும் எப்பிடித்தான் பெரிய தியாகங்களைச் செய்தாலும் தோல்வியைத்தான் தழுவவேணும்.

இப்ப இருக்கிற நிலைமையை விட இன்னும் படு மோசமான நிலைமையைத்தான் நாளைக்குத் தமிழ் – முஸ்லிம் மக்கள் சந்திக்க வேண்டி வரும்.

ஆகவே எப்பிடியாவது இப்ப இருக்கிற நிலைமையில ஒரு பொருத்தமான சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டு களத்தில இறங்கி பேச வேண்டியதுதான்.

பேச்சுக்குப் போக முதலே ஒரு நம்பிக்கை இருக்கோணும். 'நாங்கள் இந்தப் பேச்சுகளில நிச்சயமாக வெல்லுவோம்' எண்டு.

அப்பிடிச் சிந்திச்சால் அந்த வெற்றியை எப்படிப் பெறலாம்? அதுக்கு என்னவெல்லாம் செய்ய வேணும்? எண்டு தெரியவரும்.

முந்தியும் நாங்கள் தனிய அரசாங்கத்தோடதான் பேசினம். அறுபது வருசக் கதை இதுதான். இதுக்குத்தான் நாங்கள் இதுவரையான முயற்சிகளில எப்பிடித் தோற்றம்? ஏன் தோற்றம் எண்டதைப் பற்றின ஒரு முறையான ஆய்வு வேணும். சரியான ஒரு விமர்சனம் வேணும் எண்டு சொல்லிறன்.

அந்த ரண்டாவது விசயம் என்ன எண்டு அடுத்துப் பார்ப்பம்.

யாருடன் பழகினாலும் அந்தஸ்து பார்க்காமல் ஒரே மாதிரியான அணுகுமுறையுடன் உள்ளன்பு குறையாமல் பழகுங்கள்.
- ரீடர்ஸ் டைஜஸ்ட்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## இவரும் போகார்; அவரும் தரார்!

13–வது திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வெதற்கும் ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் செல்லாது என்று, ஜனசெத பெரமுனவின் தலைவர் வண. பத்தரமுல்ல சீலரத்ன தேரரிடம் தெரிவித்திருக்கிறார் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட 'எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு' என்ற அமைப்பில் ஐ.தே.க. வின் பங்காளியாக செயற்பட்டு வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும், மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணியும் இதுவரை எந்தக் கண்டனமும் தெரிவிக்காமலிருப்பது ஏன்?

13–வது திருத்தச் சட்டத்திற்கு உட்பட்ட மாகாண சபையே ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்வு என்று பகிரங்கமாக அதன் தலைவர் சொல்லிவிட்ட பிறகும், ஐ.தே.க. தலைமையிலான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு அமைப்பில் அங்கம் வகித்துவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மனோ கணேசனின் கட்சியும், குறைந்தபட்சம் அதிலிருந்து விலகிக் கொள்வதாகக் கூட இதுவரை அறிவிக்காதது ஏன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஜனநாயக மக்கள் முன்னணியும் கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக ஐ.தே.க. தலைமையிலான அந்த அமைப்பில் அங்கம் வகிக்கின்றன என்பதும் அந்த அமைப்பின் பிரதான நிகழ்வுகளில் சம்பந்தன், சுமந்திரன், மனோ கணேசன் ஆகியோர் பங்குபற்றுவதும் யாவருமறிந்ததே.

இந்நிலையில் தான், 13க்கு அப்பாலான தீர்வுக்கு ஐ.தே.க ஒருபோதும் செல்லாது என்று ரணில் ஊடகங்களைக் கூட்டிப் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார். கூட்டமைப்பும் மனோ கணேசனும் "எங்களுக்கு இது கேட்கவில்லை" என்பது போல ஏன் இருந்து வருகிறார்கள்?

"அது சிங்கள மக்களின் வாக்குகளுக்காக அவர் அங்கு சொன்னது; அதைத் தமிழ் மக்கள் கேட்கர்தது போல இருந்து விட வேண்டும். பிறகு, ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அவருக்கே வாக்களிக்க வேண்டும் என்று நாங்கள் முடிவெடுத்துக் கூட்டிக்கொண்டு வரேக்கை, நாங்கள் கேட்கும் தன்னாட்சித் தனியலகுதான் அவரது தீர்வும் என்பதை இரகசியமாகச் சொல்லுவார்" என்கிறார்களா?

ஜெனீவாப் பிரேரணை, போர்க்குற்ற விசாரணை, சர்வதேசத் தண்டனை என்று இவர்கள் தமிழ் மக்களுக்காக அல்லும் பகலும் அயராது உறங்காது 'அலுவல் பார்த்து'க் கொண்டிருக்கின்ற அந்த மகா முயற்சிகளால் ஆட்சி மாற்றம் இங்கே நடந்த பிறகும் 13க்குள் தான் விசயம் நிற்குமெண்டால்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வீரவசனங்கள் விண்ணாண முழக்கங்கள் சாதிப்பதென்ன; சாதிக்கப் போவதென்ன? மகிந்தவோடு இவர்களுக்கிருக்கும் "கோவத்"துக்காகத்தான் மாகாண சபையையும் நடத்தாமல், தெரிவுக்குழுவுக்கும் போகாமல், "முதல்ல இவரை அனுப்பிப்போட்டுப் பாப்பம்" கதை விட்டுக் கொண்டிருக்கிறார்களா?

"இவர்" போகப் போவதில்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும்; "அவர்" எதுவும் தரப் போவதில்லை என்பதும் இவர்களுக்குத் தெரியும். இடையில் எல்லாத் தேர்தல்களையும் வென்று பதவிகள் வாகனங்களைப் பிடித்துக்கொண்டு வாளாவிருப்பதற்குத் தான் அரச எதிர்ப்பு – வெறுப்பு – வீர வசனங்கள் எல்லாம்!!

"வடக்கு கிழக்கு இணைந்த தன்னாட்சித் தனியலகே தீர்வு... 13ஆவது திருத்தத்தை நாங்கள் ஒருபோதும் ஏற்கப்போவதில்லை" என்ற இவர்களது ஆதார பலமெதுவுமற்ற சவடால்கள் எல்லாம் சும்மா மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதற்குத்தான்.

- ஆசிரியர்

# மக்களை ஏமாற்றும் கருத்துக்களை வெளியிடக்கூடாது கூட்டமைப்பு

## பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களை ஏமாற்றும் வகையிலான கருத்துக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெரிவிக்கக் கூடாதென சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

2010 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் தம்முடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உடன்படிக்கை ஒன்றை செய்திருந்ததாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் தெரிவித்த கருத்தை நிராகரித்தே பொன்சேகா இவ்வாறு தெரிவித்துள்ளதாகவும், கடந்த ஜனாதிபதித் தேர்தல தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அண்மையில் வெளியிடப்பட்ட கருத்து பிழையானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன் வெளியிட்ட கருத்தை நான் நிராகரிக்கின்றேன்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைத்து அப்பிரதேச மக்கள் சுயாதீனமாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய பின்னணியை உருவாக்கிக் கொடுப்பதாக வாக்குறுதியளித்து தாம் உடன்படிக்கையில் கையொப்பமிட்டதாகவும், அந்த ஆவணத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவும் கையொப்பமிட்டு உள்ளதாகவும் அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்

மஹிந்த ராஜபக்ஸ என்ற நபர் 13ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதாக ஒப்புக்கொண்டதாகவும் அரியநேந்திரன் அண்மையில் குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் வெளியிட்ட இந்தக் கருத்து அப்பட்டமான ஓர் பொய் எனவும், மக்களை இவ்வாறு ஏமாற்றக் கூடாது என நான் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினரின் பிரதேசத்தில் உள்ள தமிழ் மக்களை ஏமாற்றக் கூடாது மக்களை ஏமாற்றாது அந்த ஆவணத்தை முடிந்தால் அம்பலப்படுத்துமாறும் அவர் சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, சரத் பொன்சேகாவின் இந்தச் சவால் குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் எவ்வித கருத்துக்களையும் வெளியிடவில்லை.

# புலிகளின் வைப்பகத்தில் அடகு; மீளப் பெறுவதற்கு சந்தர்ப்பம்

புலிகள் இயக்கத்தின் வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்திருந்தவர்கள் அவற்றை மீளப்பெற்றுக்கொள்வதற்கான உரிமையைக் கோர முடியும் இவ்வாறு இராணுவத்தரப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தத்தின் பின்னர் இன்னும் தமது நகைகளுக்கான உரிமையை கோராமலிக்கும் பொது மக்கள், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் வன்னி ஆகிய பிரதேசங்களில் உள்ள சிவில் ஒருங்கிணைப்பு அலுவலகங்களை நாடி தமது உரிமைகளைக் கோர முடியும் என்று இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

தமது நகைகளுக்கான உண்மைத் தன்மையை நிரூபிப்பதற்கான பற்றுச்சீட்டுகள் மற்றும் வேறு ஆவணங்களை மக்கள் சமர்ப்பிக்க முடியும்

தமது தங்க நகைகளுக்கான சட்டபூர்வ உரிமை கோரியுள்ள இரண்டாயிரத்துக்கும் அதிகமானோர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார்.

உரிமை கோரப்படாதுள்ள ஒரு தொகை தங்கம் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதுடன், அவற்றிற்கான தகுந்த ஆதாரங்களுடன் உரிமை கோருவதற்கும் பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதாக பிரிகேடியர் ருவன் வணிகசூ[illegible] தெரிவித்தார்.

புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட தங்க நகைகள் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில், முறையாக பட்டியலிடப்பட்டு, பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டிருந்ததாக இராணுவத்தரப்பு அறிவித்துள்ளது.

## புள்ளிவிபர அதிகாரி தரம் II பரீட்சைப் பெறுபேறு வெளியீடு

(கொழும்பு)

புள்ளிவிபரம் மற்றும் சனத்தொகை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் புள்ளிவிபர. அதிகாரி தரம் II இற்கு சேர்த்துக் கொள்வதற்கான பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று முந்தினம் வெளியிடப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

4ஆம் மாடி, ரொடுண்டா டவர் , இலக்கம். 109 ,காலி வீதி, கொழும்பு -03. என்ற முகவரியிலுள்ள புள்ளிவி[illegible] மற்றும் சனத்தொகை மதிப்பீட்டு திணைக்களத்துக்கு வந்து பரீட்சார்த்திகள் இந்தப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென மேற்படி திணைக்களம் தெரிவித்துள்ளது.

# மீன்பிடித்துறையில் வேலைவாய்ப்பு; தென்கொரியாவில் வாய்ப்பு

தென் கொரியாவில் மீன்பிடித்துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெற எதிர்பார்த்து இருப்பவர்களுக்கு இந்த வருடத்தில் இருந்து இரண்டு முறைகளின் அடிப்படையில் வேலை வாய்ப்பை பெற முடியும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

விசா ஜீ-9 மற்றும் ஜீ -10 ஆகிய முறைகளில் இந்த 'தொழில் வாய்ப்பை பெற முடியும்.

ஜீ -9 முறையின் அடிப்படையில் தொழிலைப்பெற எதிர்பார்க்கும் நபர்கள் கொரிய அரசாங்கம் நடத்தும் கொரிய மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். ஜீ 10 வீசா முறையின் கீழ், வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆகியவற்றின் தலையீடு இன்றி சட்ட ரீதியான தனியார் நிறுவனம் ஒன்றின் ஊடாக ஆழ்கடல் மீன்பிடித்துறையில் தொழில் வாய்ப்பை பெற முடியும். இவர்களுக்கு பரீட்சைகள் நடாத்தப்படுவதில்லை என்பதுடன் அடிப்படையான பரிசோதனை ஒன்று நடத்தப்படும். ஜீ 10 விசா முறை சம்பந்தமாக ஏதேனும் தகவல்களையோ அல்லது மேலதிக தகவல்களை அறிந்து கொள்ளும் தேவை இருப்பின் அவற்றை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என அமைச்சர் டிலான் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

## குடிவரவு,குடியகல்வு திணைக்களத்திற்கு நிர்வாக சேவை அதிகாரி நியமனம்

இலங்கை குடிவரவு, குடியகல்வு திணைக்களத்திற்கு இலங்கை நிர்வாகசேவையைச் சேர்ந்த புதிய கட்டுப்பாட்டாளர் நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரை காலமும் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகமாக கடமையாற்றி வந்த சூலந்த பெரேராவிற்கு பதிலாக எம்.என் ரணசிங்க நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார். எம்.என். ரணசிங்க இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தையுடைய அதிகாரி மற்றும் அவர் குடிவரவு ,குடியகல்வுத் திணைக்களத்தின் விசா கட்டுப்பாட்டுப் பிரிவில் கடமையாற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழக வியாபார முகாமைத்துவ பட்டதாரியான ரணசிங்க, குருணாகல் உதவிப் பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், வடமத்திய மாகாண கைத்தொழில் பணிப்பாளர், ஆயுர்வேத ஆணையாளர் ஆகிய பதவிகளை வகித்தவராவார்.

சூலந்த பெரேரா போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளராக நேற்று முன்தினம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.



அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழாவின் போது ஆசிரியர்கள் கௌரவிக்கப்படுவதையும், மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம்பெறுவதையும் காணலாம். (48)

# ஆலயம் மீதான விமர்சனத்தை ஒருபோதும் ஏற்க முடியாது

## - பெத்தனாச்சி ஆலய பிரதமகுரு தெரிவிப்பு -

(யாழ்ப்பாணம்)

பல்வேறு விதமாக விமர்சிப்பதை நான் ஒருபோதும் ஏற்க மாட்டேன். அதுமட்டுமன்றி பரம்பரை வழிவந்த எனது ஆலயத்தில் எவரும் உட்புகுந்து விமர்சிக்கவும் அனுமதியேன்.

இவ்வாறு நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.இளையதம்பி சபாரத்தினசிவம் தெரிவித்துள்ளார்.

ஆலயமுன்றலில் குருவினை அவதூறு செய்து பேசிய விடயம் தொடர்பாக ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.இ.சபாரத்தினசிவம் கடந்த செவ்வாய்ககிழமை ஊடக அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்.

மேற்படி ஊடக அறிவிப்பில் ஆலயபிரதமகுரு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வில் நவாலி வடக்கு பெத்தனாச்சி நாச்சிமார் ஆலயத்தின் ஆதனம் திருட்டுத்தனமாக உருவாக்கப்பட்ட ஒன்று என்றும் இதன் உட்கட்டுமான சொத்துககளை மறைமுகமாக ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. இளையதம்பி சபாரத்தின சிவத்தால் உறுதி முடிப்பு செய்யப்பட்டுள்ளது என்றும் எனது சொந்த ஆலயத்தில் அத்துமீறி உள் நுழைந்த ஒருவர் பொது மக்கள் முன்னிலையில் ஆலய முன்றலில் வைத்து அவதூறாக பேசியுள்ளதையிட்டு நான கவலை அடைகின்றேன்.

இவ் ஆலயத்தின் பரம்பரை ஆதனம் இளையதம்பி சபாரத்தினசிவம் பெண் கணேஸவரிக்கு உரியது என்பது நான் சொல்லித்தான் தெரியவேண்டும். என்பதல்ல.

இவ்வாலயத்தின் ஆதனம் முறைப்படி உரிய ஆசாரசீலரான எனக்கு வழங்கப்பட்டு பேணப்படும் ஒன்றாகும்.

கடந்த 6.9.2000 இல் HA/5/JA/763 ஆம் இலக்கத்தில் என்னால் பதிவுக்கு அனுப்பி பதிவு செய்யப்பட்டு பேணப்பட்டு வருவதை வலி.தென்மேற்கு பிரதேச செயலரும் கொழும்பில் உள்ள இந்து கலாசார பணிப்பாளரும் அறிவர்.

இந்நேரத்தில் ஆலயத்திற்கு அத்துமீறி வரும் குறித்தநபர் தேவையற்ற விவாதம், அவதூறு பேச்சினால் ஆலய பிரதம குருவான நானும் எனது குடும்பமும் குழப்பமடைந் துள்ளோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயனுள்ள கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது காந்தீயம்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான 'காந்தீயம்' பத்திரிகையின் ஒக்ரோபர் - நவம்பர் இதழ் வெளிவந்துள்ளது.

மில்க்வைற் அதிபர் மறைந்த கனகராசா பற்றிய அண்ணா தொழிலதிபர் எஸ்.பி.நடராசாவின நினைவுப்பகிர்வு மதுரையைச் சேர்ந்த காந்திய கல்வியாளர் அமரர்.டாக்டர் நாராயணசாமி பற்றிய சரஸ்வதி தம்பிப்பிள்ளையின் அஞ்சலிச்செய்தி, பேராசிரியர் மா.சின்னத்தம்பி சமகாலக்கல்வியில் காந்தியச் சிந்தனைகள் என்ற தலைப்பில் ஆற்றிய காந்திநினைவுப் பேருரை, அகிம்சைக்கு அண்ணல்காந்திஜி தரும் விளக்கம் உட்படப் பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

இவ்விதழின் இலவசப்பிரதியொன்றைப் பெற விரும்பும் அன்பர்கள் ரூபா 10.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரி எழுதப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர் 'காந்தீயம்' இல,774,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப்பெற்றுக் கொள்ள முடியும். என 'காந்தீயம' ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி அறிவித்துள்ளார்.

# சைவநெறித்தேர்வு நவம்பர் மாதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையினால் வருடந்தோறும் நடாத்தப்படும் அகில இலங்கை சைவநெறித்தேர்வு எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இத்தேர்வுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான சுட்டெண் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் பாடசாலை அதிபர்கள் வினாத்தாள் பொதிகளை தங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள இணைப்பு நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும எனவும் சைவபரிபாலனசபையின் தேர்வுச் செயலாளர் பொ.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

# நல்லூர் கிளை நூலகம் நடாத்தும் வாசிப்புமாத போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாநகரசபை நல்லூர் கிளை நூலகம், நடாத்தும் வாசகர்களுக்கான போட்டிகள் நாளை, நாளைமறுதினம் காலை நடைபெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தரம் 3,4,5 மாணவர்களுக்கு சித்திரம் வரைதல், பாடல்கள், பேச்சுத்தமிழ் ஆகியனவும், தரம் 6 முதல் 13 வரையான மாணவர்களுக்கு கட்டுரை (ஆங்கிலம்,தமிழ்) கேள்விகளுக்கு எழுத்து மூலம் பதிலளித்தல் ஆகியனவும் இடம் பெறும்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு தரம் 3 - 5 மாணவர்களுக்கு ஆங்கிலபேச்சுப் போட்டியும், 6 - 13 வரையான மாணவர்களுக்கு தமிழ்பேச்சுப் போட்டி மற்றும் ஆங்கிலபேச்சு போட்டியும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது

போட்டிகள் விபரம் வருமாறு:-

**பாட்டு**

தரம் - 03

வண்ணக்கிளிபோல் பறந்திட ஆசை

தரம் - 04

பாடநூல் - மயில் - மலையில் வந்து முகில்கள் கூட

தரம் - 05

பாடநூல் - மகாத்மாகாந்தி பற்றிய பாடல்

**பேச்சுத்தமிழ்**

தரம் - 03 - நான் விரும்பும் பெரியவர்

தரம் - 04 - கல்வி

தரம் - 05 - கற்றலில் கணணியின் பயன்பாடு என்னும் தலைப்பிலும்

**பேச்சு ஆங்கிலம**

தரம் - 03 - My self

தரம் - 04 - My hoppy is reading

தரம் - 05 - Our school library என்னும் தலைப்பிலும் பேசுதல் வேண்டும்.

தரம் 6,7,8 - வாசிப்பின் அவசியம், கற்றது கைமண் அளவு

தரம் 9,10,11 - கற்றதனாலாய பயன்என்கொல், நூலகங்களின் பயன்பாடு

தரம் - 12,13 - வாசிப்புப் பழக்கத்தின் சவால்

**பேச்சு கட்டுரை ஆங்கிலம**

தரம் 6,7,8 - Improtant of reading

தரம் - 9,10,11 - Books are my friends

தரம் 12,13 - The challenge in reading

# மயிலணி சைவமகாவித்தியாலயத்தில் குடிநீர் கிணற்றில் ஒயில்கலப்பு

## - தாகத்தால் மாணவர்கள் அவதி -

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயத்தில் குடிநீர்க் கிணற்றில் ஒயில்கலப்பு ஏற்பட்டிருப்பதால் பாடசாலை மாணவர்கள் குடிநீருக்குப் பெரும் கஷ்டங்களை அனுபவிப்பதாக பாடசாலை அதிபர் கவலை தெரிவித்துள்ளார்.

சுன்னாகம் மின்நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுஒயில் அப்பிரதேச நிலத்தடி நீருடன் கலந்து வருவது அண்மைக்காலமாகக் கண்டு பிடிக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இப்பிரதேசத்தில் குறிப்பிட்ட எல்லை வரை இடம்பெற்று வந்த இந்த ஒயில் கலப்பு, மேலும் பல பகுதிகளிற்கு பரந்து செல்ல வாய்ப்புள்ளது என்பதனையே இச்சம்பவம் எடுத்துக்காட்டுவதாக பாடசாலைஅதிபர், ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை மாணவர்களின் குடிநீர் தேவவையை நிறைவு செய்வதற்காக மாணவர்கள் அயலிலுள்ள ஆலயக் கிணற்றில் நீரினை எடுத்து வந்து பயன்படுத்துவதாகவும் இது மாணவர்களிற்கும், ஆசிரியர்களிற்கும் பெரும் சிரமமாக அமைந்துள்ளது எனவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (06)

# வாசிப்பு ஊக்குவிப்பு செயற்பாட்டை பாடசாலையில் நடைமுறைப்படுத்த கோரிக்கை

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அகிலஇலங்கை ரீதியில அனைத்துப்பாடசாலைகளிலும் வாசிப்பு ஊக்குவிப்புச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு கல்விச் சேவைகள் அமைச்சின் பாடசாலை நூலக அபிவிருத்திப்பிரிவு அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தேசியவாசிப்பு மாதமான ஒக்ரோபர் மாதத்தில் ஒரு வார காலத்தில் செயற்படுத்த் வேண்டிய 'நிகழ்ச்சிகளின் மாதிரித் திட்டம்' பற்றிய சுற்றறிக்கை சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனைத் தமது பாடசாலைகளுக்குப பொருத்தமான முறையில் தயாரித்து செயற்படுத்த முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடக்க தின வேலைத் திட்டங்கள் தொடர்பாக ஆசிரியகுழாம், மாணவர்கள் மற்றும் பெற்றோரை அறிவுறுத்தல்.

இக்காலப்பகுதியில் பாடசாலை வளாகத்திற்குள் வாசிப்பு தொடர்பான பதாகைகள் (Banner) மற்றும் சுவரொட்டிகளை (Posters) காட்சிப்படுத்தல் போன்ற வேலைத் திட்டங்களை முன்னெடுக்குமாறும் பாடசாலை நூலக அபிவிருத்திப்பிரிவு வேண்டுகோள் விடுத்துள்ளது. (10)

# கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு விசேட திட்டம்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு



(கொழும்பு)

கிராமிய அமைப்புக்களை பலப்படுத்தி கிராம மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிராம அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடனான ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்று அண்மையில் பத்தரமுல்லை "எங்கள் கிராமம்" கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அமைச்சர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசு கிராமிய அமைப்புக்களை பலவீனப்படுத்துவதாக பொய்ப்பிரசாரங்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இந்த போலிப் பிரசாரத்தில் எவ்வித உண்மையுமில்லை. கிராமிய அமைப்புக்களை பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கிறது. கிராமிய அமைப்புக்களின் ஒத்துழைப்புடனேயே கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென ஜனாதிபதி எனக்கும் எனது அமைச்சின் செயலாளருக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

எனவே கிராமங்களில் மேற்கொள்ளப்படும் கமநெகும, புறநெகும, திவிநெகும ஆகிய திட்டங்களுக்கு அரசாங்கம். மில்லியன் கணக்கில் அல்ல பிலலியன் கணக்கில் ரூபாய்களை செலவிடுகின்றது.

இந்த அபிவிருத்தி வேலைகளுக்கு கிராமிய அமைப்புக்களின் ஒத்துழைப்பு தேவை. அடுத்த வருடம் முதல் இந்த அமைப்புகளுக்கு நிதி உதவிகளை வழங்க்வும் தீர்மானித்துள்ளோம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மாணவரின் போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவர பேச்சு

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மேற்கொண்டு வரும் போராட்டத்தை முடிவிற்கு கொண்டுவரும் வகையில் பல்கலை ஆசிரியர் சங்கம் மத்தியஸ்த முயற்சியில் ஈடுபட முன்வந்துள்ளது.

அண்மையில் மாணவர்களின் போராட்டத்திற்காக அமைக்கப்பட்டிருந்த தற்காலிக கூடாரங்கள் இனந்தெரியாதோரின் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தது.

தற்போதைய நிலையில் மாணவர் தரப்பு மற்றும் பல்கலைக்கழக நிர்வாகம் ஆகியவற்றுடன் தொடர் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுவரும் ஆசிரியர் சங்கம், மாணவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை கைவிடுவது தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தின் இணக்கப்பாட்டை பெற்றுள்ளது.

இதனையடுத்து மிக விரைவில் பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படுவதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதன் பின்னர் தற்போதைய பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகளைக் காண்பதற்கு பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளது. அதற்கான மத்தியஸ்தத்தில் ஆசிரியர் சங்கம் தொடர்ந்து ஈடுபடுவது என தீர்மானித்துள்ளதாக அதன் பேச்சாளர் கலாநிதி ஹினிதும சுனில் செனவி தெரிவித்துள்ளார்.

# இலவச கல்வியை இல்லாதொழிக்க உயர்கல்வி அமைச்சர் முயற்சி

## பல்கலை பேராசிரியர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டிலுள்ள இலவசக் கல்வியை தனியார் மயப்படுத்துவதே உயர்கல்வி அமைச்சரின் பிரதான இலக்கெனவும் அவரது நடவடிக்கைகள் மாணவரிடையே மோதல்களை தூண்டும் வகையிலும், கல்வி முறைமைக்கும் அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய வகையில் அமைந்துள்ளதாகவும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க ஒனறியத்தின் தலைவர் பேராசிரியர் சந்திரகுப்த தெனுவர தெரிவித்துள்ளதாவது,

உயர்கல்வி அமைச்சின் முதன்மைப் பொறுப்பு பல்கலைக்கழக மாணவர்களின் நலன்களை உறுதி செய்து மாணவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாகும்.

எனினும், தற்போதைய உயர்கலவி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க நாட்டுக் குள் குண்டர் குழு பொறிமுறைமை ஒன்றை உருவாக்கியுள்ளார்.

மாணவர்களை அடக்குமுறைக்கு உட்படுத்திவரும் உயர்கல்வி அமைச்சர் தனது கடந்த காலத்தை சற்று நினைத்துப்பார்க்க வேண்டும்.

மக்கள் அரசாங்கமொன்றை நிறுவிக்கொள்வது தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்கிலேயேயாகும்.

ஜனாதிபதி தனது பணிகளை பிரித்து வேறு ஒருவரிடம் ஒப்படைப்பது குறித்த பணி செவ்வனே நடக்க வேண்டும் என்பதற்காகவே.

எனினும், உயர்கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளவருக்கு அந்தப் பதவி பொருத்தமற்றது.

அவர் வர்த்தக விவகார அமைச்சுப் பதவிக்கு என்றால் பொருத்தமானவராக இருக்கலாம்.

உயர்கல்வி அமைச்சின் பிரதான இலக்கு இலவச கல்வி முறைமையை தனியார் மயப்படுத்துவதேயாகும்.

இலவச கல்வியை ஒர் வர்த்தகப் பண்டமாகவே அவர் நோக்குகின்றார்.

கடந்த சில ஆண்டுகளாக பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படவில்லை.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு வழங்கப்படாத காரணத்தினால் மாணவர்கள் கொட்டகை அமைத்து போராட நேரிட்டுள்ளது.

இவ்வாறு போராடும் மாணவர்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகிப்பது, குண்டர குழுக்களைக் கொண்டு தாக்குவது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல.

உயர்கல்வி அமைச்சரின் இந்த நடவடிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

நாட்டு மக்களுக்கு, மாணவர்களுக்கு சேவையாற்ற நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் தமது கடமைகளை உரிய முறையில் செய்யத் தவறினால் மாற்று நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என மக்களிடம் கோருகின்றேன் என பேராசிரியர் சந்திரகுப்த தெனுவர மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச ஊழியருக்கு ஆட்டோ ஏமாந்த பேராதனை பல்கலை

## கில்லாடியை கைது செய்ய நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி செயலக விசேட விசாரணைப் பிரிவு நபர் எனக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்டவரை கைது செய்ய கண்டி பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அரச ஊழியர்களுக்கு முச்சக்கர வண்டி வழங்கும் திட்டம் என்ற பெயரில் 32 இலட்சம் ரூபா பணத்தை குறித்த நபர் மோசடி செய்துள்ளார். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தொலைநகல் ஒன்றை அனுப்பிய குறித்த நபர், பல்கலைக்கழக சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் இந்த விசேட கொடுப்பனவு வழங்கப்படும் என கூறியுள்ளாரா.

அதனைப் பெறவேண்டுமாயின் ஒவ்வொருவரும் தலா 25,000 ரூபா செலுத்த வேண்டும் என தொலைநகல் செய்தியில் சந்தேகநபர் குறிப்பிட்டுள்ளார். பல்கலைக்கழக நிர்வாக பீட அனுமதியின் பின் சந்தேகநபர் அனுப்பிய வங்கிக் கணக்குக்கு 32 இலட்சம் ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

எனினும் இதுகுறித்து சந்தேகம் கொண்ட ஒருவர் ஜனாதிபதி செயலகத்திற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி கேட்டபோது இது ஏமாற்றுத் திடடம் என தெரியவந்தது. அதன்படி, குறித்த வங்கிக் கணக்கை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபரை கைது செய்ய கண்டி பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

# ஜனாதிபதி தேர்தல் குறித்து ஆளும் கூட்டமைப்பில் குழப்பம்

## என்கிறது ஜே.வி.பி.



ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது குறித்து ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாக என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் தலைவர் அனுர குமார திஸநாயக்க இதனை தெரிவித்துள்ளார். அத்துடன் அமைச்சரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளருமான மைத்திரிபால சிறிசேனா தேர்தலை தற்போதைக்கு நடத்த வேண்டாமென ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு வாக்குறுதியளித்தது போல அரசாங்கம் அரசமைப்பில் மாற்றங்களை மேற்கொண்ட பின்னரே தேர்தலை சந்திக்க வேண்டும் என சிறிசேனா கருதுகிறார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவும் அடுத்த வருடம் தேர்தலை நடத்துவது குறித்து அதிருப்தி கொண்டுள்ளது. அதன நாடாளுமன்ற உறுப்பினர் வெளிப்படையாகவே ஜனாதிபதிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளாா.

ஜனாதிபதியும் அவரது குடும்பத்தினரும் அவர்களுக்கு நெருக்கமானவர்களும் மாத்திரமே ஜனவரியில் தேர்தலை நடத்தவேண்டும் என்பதில் உறுதியாகவுள்ளனர். சட்ட விரோதமான இந்தத் தேர்தலை நடைபெற அனுமதிப்பதா என்பதே எதிர்க்கட்சிகளின் முக்கிய நோக்கமாக இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# அல்கொய்தா சந்தேகநபரை நாடு கடத்தியது மலேஷியா

மலேஷியாவில் வைத்து கைது செய்யப்பட்ட அல்-கொய்தாவின் சந்தேகநபரென கூறப்படும் இலங்கைப் பிரஜையான மொஹமட் உசையின் மொஹமட் சுலைமான், நேற்று முன்தினம் இரவு நாடு கடத்தப்பட்டார் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாகவே இவர் நாடுகடத்தப்பட்டுள்ளார்.

இந்தியாவில் தாக்குதல் நடத்தத் திட்டமிட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே அவர், மலேஷியாவில் வைத்து கைது செய்யப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை நடத்துவதற்காக அவர், பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்தியாவில் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதி கைதுசெய்யப்பட்ட இலங்கையரான ஷாகீர் உசைன் வழங்கிய தகவல்களுக்கு அமையவே இவர், கோலாலம்பூரில் வைத்து கடந்த மே மாதம் கைதுசெய்யப்பட்டார.

இலங்கைப் பிரஜையான மொஹமட் உசையின் மொஹமட் சுலைமானிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்காக அவரை தங்களிடம் ஒப்படைக்குமாறு இந்தியா கோரியிருந்த போதிலும் அதனை மறுத்த மலேஷியா, அவரை இலங்கைக்கு நாடு கடத்தியுள்ளது.

தென்னிந்தியாவிலுள்ள தூதரகங்களின் மீது தாக்குதல்களை மேற்கொள்வதற்கு முயற்சித்தார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





பண்டத்தரிப்பு பத்திமா வாசகர் வட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டது. விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பண்டத்தரிப்பு பங்குத்தந்தை அருட்பணி இயூயின் பிரான்ஸிஸ் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு வாசகர் வட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதையும் காணலாம். (48)

# விழிப்புலன் இழந்தோருக்கு உதவ முன்வரவேண்டும் வடமாகாண சபை

## – வேண்டுகோள் விடுத்தார் சங்கத்தலைவர் –

(யாழ்ப்பாணம்)

பார்வையிழந்தவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளன. அவர்களின் குடும்பங்களுக்கு வடக்கு மாகாணசபை மானிய உதவிகளை வழங்க வேண்டும் அல்லது கடன் அடிப்படையிலாவது உதவிகளை வழங்க வேண்டுமென விழிப்புலன் இழந்தோர் சங்கத்தலைவர் வி.கனகசபை முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வுகள் யாழ். கைதடி விழிப்புலன் இழந்தோர் சங்க தொழில் பூங்கா வளாகத்தில் நேற்றுமுன்தினம் மு.ப 11 மணியளவில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாணசபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டபோதே இந்தக்கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

பேரூந்து போக்குவரத்தில் விழிப்புலன் இழந்தவர்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். பொதுவாக இவர்களை பேருந்துகள் ஏற்றிச் வதில்லை அவ்வாறு ஏற்றினாலும் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் இடம் கொடுக்கப்படுவதுமில்லை. சிலவேளைகளில் நடத்துநர்கள் அவர்களை வேறு இடங்களிலும இறக்கி விட்டும் செல்கின்றனர். இவற்றுக்கு ஒரு தீர்வினைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிகழ்வு நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழிற் பூங்கா வளாகத்தில் போதியளவு அடிப்படை வசதிகள் இல்லை பொதுவாக ஆண்கள் விடுதியில் ஒரு மலசலகூடம் மட்டுமேயுள்ளது. வழிபாட்டறை வசதிளும் இல்லை. யுத்தம் காரணமாக தடுப்பில் இருந்து வந்த பார்வையற்ற இரு மாணவிகள் எமது சங்கத்தின்மூலம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் கல்வி கற்று இம்முறை பல்கலைக் கழகத்திற்கு தெரிவாகியுள்ளனர். இவர்கள் பல்கலைக்கழகம் சென்றுவருவதற்கான போக்குவரத்து வசதிகளை செய்து தர வேண்டும் என. தெரிவித்தார்.

மேலும் எமது சங்கத்தினர் குடும்ப வாழ்வாதாரத்தை முன்னெடுக்க மேற்கொள்ளும் கைத்தொழில் பொருட்களை சந்தைப் படுத்துவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். காரணம் தென்னிலங்கையில் இருந்து வருகின்ற தரம் குறைந்த பொருட்கள் குறைந்த விலையில் விற்கப்ப டுவதால் அவற்றுடன் போட்டி யிட முடியாதுள்ளது. மிக முக்கியமாக வங்கிகளில் இவர் களது பெயர்களில் கணக்கு ஆரம்பிக்க முடியாதுள்ளது. ஆரம்பத்தில் கணக்கை ஆரம் பித்தவர்களுடைய கணக்குகள் தொடர்ந்து பேணப்படுகின்ற போதிலும் புதிய கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. அதற்கு இவர்களுக்கு பார்வை இல்லை எனவும், இவர்களால் வங்கி சட்ட திட்டங்களை வாசித்து தெரிந்து கொள்ள முடியாது எனவும் கூறி ஒதுக்குகின்றனர.

இவற்றுக்கு வடக்கு மாகாணசபை ஊடாக முதலமைச்சர் தீர்வு கண்டுதர வேண்டுமென கோரிக்கைகளை முன்வைத்தார். மேலும் வெள்ளைப்பிரம்பு விழிப்புலன் இழந்தவர்களின் நண்பன், அதுவே அவர்கள் எடுத்து வைக்கும் அடுத்த அடிக்கு உதவி புரிகிறது. அதனால் அதனை கொண்டு வருபவர்களுக்கு மரியாதை கொடுங்கள் உதா சீனப்படுத்தாதீர்கள் என உருக்கமாக மற்றவர்களிடம் கேட்டுக்கொண்டார். (48)

# காற்றுடன் கூடிய மழையினால் நெடுங்கேணியில் வீடு சேதம்

வவுனியா வடக்கு நெடுங்கேணிப்பகுதியில் கடந்த செவ்வாய்க் கிழமை காற்றுடன் கூடிய மழை பெய்ததால் மக்கள் பெரும் இழப்புக்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய்க்கிழமை பெய்த மழையினால் நெடுங்கேணி குளவிசுட்டான் கிராமத்தில் உள்ள வீடு ஒன்று சேதமடைந்துள்ளதாகவும் அங்கு வைக்கப்பட்டிருந்த அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உணவுப்பொருட்கள் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (40)

# “நாம் நண்பர்கள்” அமைப்பினால் இரத்தான முகாம் ஏற்பாடு

“நாம் நண்பர்கள்” அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று இடம்பெறவுள்ளது.

இரத்த வங்கிகளில் ஏற்பட்ட தட்டுப்பாட்டினை அடுத்தும் தீபாவளியை முன்னிட்டும் இவ் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவ் இரத்ததான முகாம் நாளை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

உயிர்காக்கும் உன்னத தானமாகிய இரத்ததானத்தில் ஆர்வமுள்ள அனைவரையும் பால் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ளுமாறு “நாம் நண்பர்கள்” அமைப்பினர் கேட்டுள்ளனர்.

அத்துடன் “நாம் நண்பர்கள்” அமைப்பினர் பூநகரிப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு 600 அப்பியாசகக் கொப்பிகளை அன்பளிப்பு செய்துள்ளதுடன், வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவும் முகமாக கிரிக்கெட் போட்டியொன்றையும் நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

## கலைஞர்களின் விபரத்திரட்டு நூல்வெளியிட ஆக்கங்கள் சேகரிப்பு

(வலிகாமம்)

வலிகாமம் கிழக்கு பண்பாட்டுப் பேரவையினால் பிரதேச கலைஞர்களது விபரங்கள உள்ளடங்கியுள்ள விபரத்திரட்டு நூலொன்று வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதால் வலி. கிழக்கைச சேர்ந்த வேறு பிரதேசங்களில் வேறு மாவட்டங்களில் வெளிநாடுகளில் வாழ்கின்ற கலைஞர்கள் தங்களது கலைத்துறை தொடர்பான விபரங்களை புகைப்படத்துடன் எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னதாக . வலி.கிழக்கு பிரதேச செயலகத் திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

# சங்கானை மக்கள்வங்கியில் ஊழியரின் மோ.சைக்கிள் திருட்டு

மக்கள் வங்கி சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலிருந்து ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிள் காணாமற போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

சங்கானையில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் பணியாற்றும் ஊழியர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை வழமையாக நிறுத்தும் ஊழியர் சைக்கிள்பாதுகாப்பு நிலையத்தில் நிறுத்தி வைத்துள்ளார். வழமைபோல பணி நிறை வடைந்து வீடு செல்வதற்காக மோட்டார் சைக்கிளை எடுக்க வந்த போதே மோட்டார் சைக்கிள் திருட்டுப்போயுள்ள விடயம் தெரிய வந்துள்ளது.

திருட்டு தொடர்பாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன். இந்தச்சம்பவம் தொடர்பாக மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (48)

# முரசின் இன்றைய பலன்



(17.10.2014 வெள்ளிக்கிழமை)

ஜய வருஷம் புரட்டாதி மாதம் 31 ஆம் திகதி.
மரணயோகம் / நவமி.
பூச நட்சத்திரம் பி.ப. 04.11 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம் 10.32 - 12.02 வரை. சுபநேரம் 06.02 - 07.32 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்காததால் வெளியூர் பயணம் செய்ய எண்ணம். இக்கட்டான சூழ்நிலை யில் புத்திசாதுரியத்தினால் இடரைக்களைதல். |
| ரிஷபம் | சகோதரர் உதவியினால் புதிய வியாபார முயற்சியில் ஈடுபட ஏற்ற நிலையத்தைத் தெரிவு செய்தல். ஆசிரிய மாணவ உறவு சகிப்புத்தன்மையினால் சுமுக நிலையில் இருத்தல். |
| மிதுனம் | பங்குத்தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிட்டடாமையினால் தனித்தியங்க முடிவு செய்தல். தவறிய ஆவணம் கைக்கெட்டியதால் மகிழ்ச்சியடைதல். |
| கடகம் | விடாப்பிடியாக நின்றதால் எடுத்தபணி நிலுவையின்றி நிறைவேறுதல். வங்கிக்கு பணம் எடுத்துச்செல்கையில் மிகுந்த கவனமாக செயற்படுதல் அவசியம். |
| சிம்மம் | தொழிலில் சிக்கல் உருவாகாவிட்டாலும் வீண்வாக்கு வாதத்தைத் தவிருங்கள். எவருக்கும் சாட்சிக்காக கையொப்பம் இடுவதைக் கைவிடுதல் நன்று. |
| கன்னி | வியாழசுகம் இருப்பதினால் கைக்கெட்டாத நீண்டநாள் நிலுவை பெற முறையீடு செய்தல். அன்றாட வேலைகளைக கவனித்துக் கொண்டிருப்பதுடன் சந்திக்கும் நபர்களில் எச்சரிக்கையாக இருங்கள். |
| துலாம் | எதிர்பாராது ஏற்பட்ட சம்பவமொன்றினால் மனந்தளர்ந்து பதகளிப்புத் தோன்றலாம். முடிவாக்கப்பட்ட விவாக சம்பந்தம தெளிவின்மையால் மனதிற்கு சற்றுவேதனை தரலாம். |
| விருச்சிகம் | பணத்திற்கு ஏற்பட்ட பற்றாக்குறை நண்பர் ஒருவரால் நிவர்த்தி செய்தல். பிள்ளைகளின் நடமாட்டத்தைக் கவனித்ததால் ஏற்படவிருந்த ஆபத்து விலகல். |
| தனுசு | சுபகாரியம் ஏற்படவிருந்த வேளையில் குழம்புதல். அட்டமத்துக்குரு இருப்பதினால் தொல்லைகள் ஏற்டாதிருக்க தெய்வநம்பிக்கையை மேற்கொள்ளல். |
| மகரம் | விசாகிடைக்காத நிலையில் வெளிநாட்டுப்பெண் ஒருவரை மணம்முடிக்க முயற்சித்தல். பெற்றோரின் தேகநலம் பற்றிக்கவனமெடுத்ததால் நோயின் ஆதிக்கம் குறைவடைதல். |
| கும்பம் | வெளியூரிலிருந்து உறவினர் மனைக்கு வருவதினால் குதூகல மேற்படல். எதிர்பாராது ஏற்பட்ட சுபகாரியம் கொண்டாடப்பணத்திற்கு திண்டாட்டம். |
| மீனம் | கொடுக்கல் வாங்கலில் சற்று இடர் ஏற்படகூடுமாகையால் எச்சரிக்கையுடன் செயற்படல். விவாக நிறைவேற்றத்திற்காக சம்பந்தக்கலப்பு ஏற்பட ஏற்ற நாளைக்குறித்தல். |

# ஒரு நாள் போட்டியிலிருந்து ஓய்வு பெறுங்கள் மிஸ்பா




(லாகூர்)

ஒரு நாள் போட்டியிலிருந்து கப்டன் மிஸ்பா உல்-ஹக் ஓய்வு பெற வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் வாசிம் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் கப்டன் மிஸ்பா உல்-ஹக் சமீபத்தில் நடைபெற்ற இலங்கை மற்றும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டிகளில் துடுப்பாட்டத்தில் சொதப்பி ஏமாற்றம் அளித்தார். மோசமான ஆட்டத்திறன் காரணமாக அபுதாபியில் சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில், மிஸ்பா உல்-ஹக் அணியிலிருந்து விலகினார். அத்துடன் ஓட்டங்கள் குவிக்கத் தவறும் பட்சத்தில் விளையாடித் தான் ஆக வேண்டும் என்று சொல்ல முடியாது. அணியும், நாடும் தான் முக்கியம் என்றும் தெரிவித்திருந்தார்.

இதனால் அடுத்த ஆண்டு (2015) நடைபெறும் உலக கோப்பை போட்டிக்கான பாகிஸ்தான் அணியின் கப்டனாக மிஸ்பா உல்-ஹக் தொடருவாரா? என்பதில் சந்தேகம் நிலவி வருகிறது.



இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அக்ரம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், களத்தில் மிஸ்பா தைரியமாகவும், ஆக்ரோஷமாகவும் முடிவு எடுக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி செயற்படுவதில்லை. துணை கப்டன் யாராவது பாகிஸ்தான் அணியை வழி நடத்த தயார் என்று சொன்னால் ஒருநாள் போட்டியிலிருந்து மிஸ்பாவுக்கு விடை கொடுக்கலாம். ஒருநாள் போட்டித் தொடரை வெல்ல வாய்ப்பு உள்ள அணியாக அவுஸ்ரேலியா தான் இருந்தது. தோல்விக்கு பாகிஸ்தான் அணி மீது பழி சுமத்த முடியாது. ஏனெனில் மற்ற நாடுகளை விட பாகிஸ்தான் அணி குறைவான சர்வதேச போட்டிகளில் தான் விளையாடுகிறது. இந்திய அணி அதிகப்படியான போட்டிகளில் விளையாடி வருகிறது. இதேபோல் இலங்கை அணியும் நிறைய போட்டிகளில் ஆடுவதால் சிறப்பாக செயற்பட்டு வருகின்றது.

சயிட் அஜ்மலுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதால் பாகிஸ்தான் பந்து வீச்சில் வலுவிழந்திருக்கிறது. உமர் அக்மல், உமர் அமின், ஆசாத் ஷபிக் போன்ற சிறந்த வீரர்கள் அணியில் உள்ளனர். ஆனால் அவர்கள் தங்கள் தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொள்ளவில்லை. அத்துடன் போதுமான தைரியத்துடன் செயற்படுவதில்லை. இளம் வீரர்களின் திறமையை வளர்க்க 19 வயதுக்கு உட்பட்ட மற்றும் பாகிஸ்தான் ஏ அணியினருக்கு அதிக போட்டித் தொடர் வாய்ப்புகளை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை செய்து கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்திய அணிக்கு காத்திருக்கும் சவால்

(சிட்னி)

அவுஸ்ரேலிய மண்ணில் இந்திய அணி பெரும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். உள்ளூரில் சிறப்பாக செயற்பட்டு இந்திய அணிக்கு நெருக்கடி கொடுப்போம் என அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் வட்சன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு எதிராக நடைபெறவுள்ள கிரிக்கெட் தொடரில், ஆடுகளங்கள் உள்ளூர் வீரர்களுக்கு ஒத்துழைக்கும் வகையில் அமைக்கப்படும் என நம்புகிறோம். ஏனெனில், நாங்கள் இந்தியா சென்று விளையாடும்போது, அங்குள்ள ஆடுகளங்கள் அவர்களுக்கு ஏற்ற வகையில் தான் அமைக்கப்படுகின்றன. இந்திய அணியில் உலக தரம் வாய்ந்த வீரர்கள் பலர் உள்ளனர்.

குறிப்பாக, துடுப்பாட்ட வீரர்கள் பலர் திறமை வாய்ந்தவர்கள். ஆனால், அவர்களுக்கு அவுஸ்ரேலிய மண்ணில் கடுமையான சவால் காத்திருக்கிறது என்பது மட்டும் உறுதி. ஆரம்ப வீரராக எல்லா வகை கிரிக்கெட் போட்டியிலும் சிறப்பாக விளையாடியிருக்கிறேன். இனிங்ஸின் தொடக்கத்திலேயே களமிறங்குவதால் எந்த நெருக்கடியும் இல்லாமல் விளையாட முடிகிறது. இந்தியாவுக்கு எதிரான தொடரிலும் அது தொடர வேண்டும் என விரும்புகிறேன். நடு வரிசையில் களமிறங்கும்போது சூழ்நிலையை நன்றாகக் கணித்து அதற்கேற்ப விளையாட வேண்டியிருக்கும். அதனால் சில சமயம் இயல்பான அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறியிருக்கிறேன்.

அவுஸ்ரேலிய, இந்தியா அணிகள் மோதும் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் டிசம்பர் 4ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நடன மங்கைக்கு அடித்தது யோகம்





கால்பந்தாட்டப் போட்டியொன்றில் உற்சாக நடன மங்கைகளில் (சியர்லீடர்) ஒருவராக யுவதியொருவர் நடனமாடிக் கொண்டிருந்தபோது அவரை திருமணம் செய்துகொள்வதற்கு விமானப்படை வீரர் ஒருவர் சம்மதம் கோரிய சம்பவம் அமெரிக்காவில் இடம்பெற்றுள்ளது.

கிளேறி தோர்ன்டன் எனும் இந்த யுவதி அரிஸோனா கர்டினால்ஸ் எனும் கால்பந்தாட்ட அணியின் சியர் லீடர்களில் ஒருவராவார். கடந்த ஞாயிறன்று நடைபெற்ற போட்டியொன்றின்போது அவ்வணியின் ஏனைய உற்சாக நடன மங்கையர்களுடன் இணைந்து நடனமாடிக்கொண்டிருந்தார் கிளேறி. அப்போது அக்குழுவின் முன்னால் வந்த விமானப் படை வீரர் எரிக் ஸ்ரப், ஒற்றைக்காலை மடித்து மண்டியிட்டவாறு கிளேறியை திருமணம் செய்து கொள்ள சம்மதம் கோரியுள்ளார்.

இக்குழுவின் நடனத்தை பல கமராக்கள் படம்பிடித்துக் கொண்டிருந்த நிலையில் எரிக் ஸ்ரப் இவ்வாறு நடந்து கொண்டமை கிளேறிக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனினும், அவர் திருமண கோரிக்கைக்கு சம்மதம் தெரிவித்தார். கிளேறியின் நடனக் குழுவிலுள்ள ஏனைய யுவதிகளும் இதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தவர்களாக காணப்பட்டனர்.

## நான்காவது ஒரு நாள் இன்று

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் நான்காவது போட்டி இன்று இந்தியாவின் தரம்சாலாவில் நடைபெறவுள்ளது. முதலிரு போட்டிகளில் இரு அணிகளும் ஒவ்வொரு வெற்றியைப் பதிவு செய்துள்ளன. மூன்றாவது போட்டி புயல் கர்ரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கிண்ணம் வென்றதால் பெருமை

சீன ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றமை பெருமை அளிக்கின்றது என சுவிஸின் நட்சத்திர ரென்னிஸ் வீரர் பெடரர் தெரிவித்துள்ளார். ஆசியாவில் நடைபெறும் மிகப்பெரிய ரென்னிஸ் தொடர் சீன ஓப்பன். இத்தொடரில் கடந்த பல ஆண்டுகளாக பங்குபற்றி வந்தபோதிலும் கிண்ணத்தை வெல்ல முடியவில்லை. நடப்பு ஆண்டு கிண்ணத்தை வெல்லக் கிடைத்ததை பாக்கியமாகக் கருதுகின்றேன். இதற்கு அதிர்ஷ்டமும் எனக்கு பெரும் துணைபுரிந்தது. குறிப்பாக, ஆரம்ப ஆட்டத்திலிருந்தே அதிர்ஷ்டம் என் பக்கம் தான். ஏனெனில் எனது முதலாவது ஆட்டத்தில் (ஆர்ஜென்ரீனாவின் லியோனர்டோ மேயருக்கு எதிராக) மட்டும் 5 முறை ஆபத்திலிருந்து தப்பி வந்தேன். மொத்தத்தில் இது ஒரு கனவு வாரம் போல் எனக்கு அமைந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## மனைவியை தூக்கி ஓடும் போட்டி திருமணம் செய்யாத தம்பதி வெற்றி

மனைவியை சுமந்துகொண்டு ஓடும் போட்டி அமெரிக்காவின் மேய்ன் மாநிலத்தில் அண்மையில் நடைபெற்றது. வட அமெரிக்க பிராந்திய ரீதியில் நடைபெற்ற இப்போட்டியில் சுமார் 50 ஜோடிகள் கலந்துகொண்டன. மணல் மேடுகள், நீர் நிலைகள், சேறு, மரக் குற்றிகள் முதலான்வற்றைக் கடந்து 254 மீற்றர் தூரம் போட்டியாளர்கள் ஓடினர். ஜெஸி வோல் என்பவர் தனது மனைவியான கிறிஸ்டினா அர்செலோட்டை தூக்கிக் கொண்டு ஓடி முதலிடம் பெற்றார். ஆனால், இவர்கள் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை. அடுத்த வருட் யூன் மாதமே தாம் திருமணம் செய்துகொள்ளவிருப்பதாக இவர்கள் தெரிவித்தனர். அடுத்த வருடம் சுவீடனில் நடைபெறவுள்ள, மனைவியை சுமந்து கொண்டு ஓடும் உலகளாவிய சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

# ஜேர்மனிக்கு அதிர்ச்சியளித்த அயர்லாந்து



யூரோ கிண்ண கால்பந்துத் தொடரின் தகுதிச் சுற்று ஆட்டத்தில் உலக சம்பியன் ஜேர்மனி அணிக்கு அதிர்ச்சி அளித்தது அயர்லாந்து அணி. அயர்லாந்து அணியின் ஜான் ஓஷியா 90ஆவது நிமிடத்தில் அடித்த கோலினால் ஆட்டம் 1-1 என சமநிலையானது. இதனால் உலக சம்பியன் ஜேர்மனி அதிர்ச்சியடைந்தது. ஜேர்மனி அணியே இடைவேளைக்குப் பின்னரான ஆட்டத்தில், 71ஆவது நிமிடத்தில்தான் குரூஸ் மூலம் முதல் கோலை அடித்தது. இந்த வெற்றி மூலம் 9 ஆட்டங்களில் 7 புள்ளிகள் பெற்று அயர்லாந்து பிரிவு டி-யில் நல்ல நிலையில் உள்ளது.

ஆரம்ப நேர ஆட்டங்களில் அயர்லாந்து பாதுகாப்பு அமைப்பில் கவனம் செலுத்த ஜேர்மனி பெரும்பகுதி ஆதிக்கம் செலுத்தினாலும் இடைவேளைக்கு முன்பாக கோல் எதையும் அடிக்க முடியவில்லை. மேலும் உலகக் கோப்பை இறுதியில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்திய ஜேர்மனி அணியில் 5 வீரர்கள் மட்டுமே களத்தில் இருந்தனர். ஆட்டம் தொடங்கிய 5ஆவது நிமிடத்தில் ஜேர்மனி வீரர் எரிக் டர்ம் 31 மீற்றர்கள் தொலைவிலிருந்து அடித்த ஷொட் கோலாக மாறவில்லை. இடைவேளைக்கு முன்பு குறிப்பிடத்தகுந்த வாய்ப்பு இதுவே. இடைவேளைக்குப் பின் லுகாஸ் பொடோல்ஸ்கி, கரிம் பெல்லராபி, டோனி குரூஸ், தோமஸ் முல்லர் ஆகியோர் அயர்லாந்துக்கு நெருக்கடி அளித்தனர். கடைசியில் 71ஆவது நிமிடத்தில் குரூஸ் கோல் அடித்தார். ஜேர்மனியின் 17வது கோல் முயற்சியாகும் இது. ஆனால் கடைசி நிமிடத்தில் அயர்லாந்து வீரர் ஜெப் ஹெண்ட்ரிக் அடித்த பாஸை ஓஷியா கோலாக மாற்ற ஜேர்மனி அதிர்ச்சியடைந்தது.

பிரிவு டி-யில் ஜேர்மனி 4 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் உள்ளது. அயர்லாந்து 7 புள்ளிகளுடன் 2ஆம் இடம் வகிக்கிறது.

# பளு தூக்கலில் பதக்கம் வென்றோர்

(கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டி அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் வடமாகாணம் சார்பாகப் பங்கு கொண்ட பாடசாலை வீர,வீராங்கனைகள் நான்கு தங்கம், ஏழு வெள்ளி, ஏழு வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் பதக்கம் வென்றோர் விபரம் வருமாறு:, 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பளு தூக்கல் போட்டியின் 56 எடைப் பிரிவுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் ரி. விதுஷன் 121 கிலோ எடையைத் தூக்கி தங்கம், 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான பளு தூக்கல் போட்டியில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனை வி. ஆஷிகா 63 கிலோ எடைப் பிரிவில் 112 கிலோ எடையைத் தூக்கித் தங்கம், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் அச்சுவேலி மத்திய கல்லூரி வீரர் கே. டுசாந் 94 கிலோ எடைப் பிரிவில் 210 கிலோ எடையைத் தூக்கி தங்கம், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை வீராங்கனை பி. டெனிஜா 63 கிலோ எடைப் பிரிவில் 118 கிலோ எடையை தூக்கி தங்கம், 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியின் யாழ். மத்திய கல்லூரி வீரர் எஸ். விஸ்ணுகுமார் 69 எடைப் பிரிவில் 165 கிலோ எடையை தூக்கி வெள்ளி, இதே வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் ரி. பபிலன் 77 கிலோ எடைப் பிரிவில் 111 எடையைத் தூக்கி வெள்ளி, 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் எஸ். மிதுன் 85 கிலோ எடைப் பிரிவில் 136 கிலோ எடையைத் தூக்கி வெள்ளி, இதே வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் எஸ். மதிரோஜன் சர்மா 94 எடைப் பிரிவில் 126 கிலோ எடையை தூக்கி வெள்ளி, 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீராங்கனை வி. சுஷதிகா 53 கிலோ எடைப் பிரிவில் 70 கிலோ எடையை தூக்கி வெள்ளி, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் எஸ். கிருசிகன் 105 கிலோ எடைப் பிரிவில் 121 எடையைத் தூக்கி வெள்ளி, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முள்ளியவளை வித்தியானந்தா வீராங்கனை ஆர். கௌசிகா 58 கிலோ எடைப் பிரிவில் 65 கிலோ எடையை தூக்கி வெள்ளி, 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் 50 எடைப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் எஸ். அஜிதரன் 111 எடையை தூக்கி வெண்கலம் 77 கிலோ எடைப் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய வீரர் கே. மிது 110 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம், 94 கிலோ எடைப் பிரிவில் வீரபுரம் மணிவாசகர் வித்தியாலய வீரர் ஆர். ஹரிகரன் 125 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம், 94 கிலோ எடைப் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரி வீரர் ரி. ஸ்ரீசன் 116 கிலோ எடையைத் தூக்கி வெண்கலம், 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய வீரர் ஜெனோசன் 77 கிலோ எடைப் பிரிவில் 151 எடையைத் தூக்கி வெண்கலம், 85 கிலோ எடைப் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி வீரர் எஸ். அபிசேக் 167 எடையை தூக்கி வெண்கலம், 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் வடமராட்சி சிதம்பராக் கல்லூரி வீராங்கனை ஆர். தஷாந்தினி 63 கிலோ எடைப் பிரிவில் 52 கிலோ எடையை தூக்கி வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.



## ஆஷிகாவுக்கு வெள்ளிப் பதக்கம்

(களனி)

விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட அகில இலங்கை திறந்த பளு தூக்கல் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி வீராங்கனை ஆஷிகா விஜய பாஸ்கர் வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார்.

விளையாட்டு அமைச்சினால் நடாத்தப்பட்ட இப்போட்டி கடந்த 13ஆம் திகதி களனி பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதில் 58 கிலோ எடைப் பிரிவில் பங்குபற்றிய சுண்டிக்குளி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த 13 வயது வீராங்கனை ஆஷிகா விஜயபாஸ்கர் 115 கிலோ எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கம் வென்றுள்ளார். அண்மைய பளு தூக்கல் வரலாற்றில் 13 வயது வீராங்கனை ஒருவர் திறந்த போட்டி ஒன்றில் இவ்வாறான பெறுபேற்றைப் பெற்றிருப்பது சாதனைக்குரிய விடயம் என்றும், தாம் அறிந்த வரை ஆஷிகா வயது நிரம்பிய வீராங்கனைகள் போட்டிகளிலேயே பங்குகொள்வதில்லை எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். இதேவேளை, அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான பளு தூக்கல் போட்டியில் ஆஷிகா தங்கப் பதக்கம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## விபுலானந்தன் கூடைப்பந்து இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையினால் வருடா வருடம் நடாத்தப்படும் அமரர் பொன். விபுலானந்தன் நினைவு கூடைப் பந்தாட்டத் தொடர் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. ஆண், பெண் அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் இன்றைய தினம் மூன்று ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஆண்கள் பிரிவில் யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் மல்லாவி மத்திய கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி அணி எதிர் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், பெண்கள் பிரிவில் சுன்னாகம் இராமநாதன் கல்லூரி எதிர் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மட்ட ஜோன் டார்பட் கோலூன்றல் மகாஜனவின் அனித்தா, ரிசோத் தங்கம்





(தியகம)

84ஆவது சேர் ஜோன் டார்பட் சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியின் கோலூன்றலில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் அனித்தா மற்றும் ரிசோத் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

84ஆவது சேர் ஜோன் டார்பட் சிரேஷ்ட் மெய்வல்லுநர் போட்டி தியகம மகிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றது. இதில் ஆண், பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீராங்கனை ஜெ. அனித்தா 3.20 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி வீரர் ப. ரிசோத் 3.90 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் வென்றுள்ளனர். அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான கோலூன்றிப் பாய்தல் போட்டியிலும் இவர்கள் இருவரும் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## முரளி கிண்ண ருவென்ரி-20 யாழில் விரைவில்

(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க வெற்றிக் கிண்ண ருவென்ரி-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் 2ஆம் திகதி வரை கிளிநொச்சி, மாங்குளம், ஒட்டுசுட்டான், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

வருடா வருடம் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பங்கு கொள்ளவுள்ளன.

இப்போட்டித் தொடரில் முதல் சுற்று ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி, மாங்குளம் மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளதாகவும், அரையிறுதி ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்திலும், இறுதி ஆட்டங்கள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (எஸ்.பி.)


## அரையிறுதியில் நவஜீவன்ஸ்

(நெல்லியடி)

திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்திற்கு உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரில் லீக் ஆட்டமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ், சக்கோட்டை சென். சேவியர் அணிகள் மோதின. இரு அணிகளும் இறுதி வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக போட்டி சமநிலையில் நிறைவு பெற்றது.

புள்ளிகள் அடிப்படையில் நவஜீவன்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (12)



84ஆவது சேர் ஜோன் டார்பட் சிரேஷ்ட் மெய்வல்லுநர் போட்டியின் கோலூன்றிப் பாய்தலில் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்ற அளவெட்டி அருணோதயக் கல்லூரி வீரர் கே.நெப்தலி ஜொய்சன் வெற்றிக்கான இறுதிப் பாய்ச்சலில் ஈடுபட்டதைக் காணலாம்.

## வென்றது ஞானமுருகன்

(உரும்பிராய்)

கொற்றாவத்தை சிவானந்தா அணிக்கெதிரான போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி அபார வெற்றிபெற்றது.

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழகம் நடாத்தி வரும் அணிக்கு ஏழு பேர் கொண்ட மாபெரும் கால்பந்தாட்டப் போட்டி உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் சிவானந்தா அணியும், ஞானமுருகன் அணியும் மோதின. இதில் ஞானமுருகன் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. இப்போட்டித் தொடர் விலகல் முறையில் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# ஜனாதிபதி தேர்தலை நோக்கிய ஆளும் - எதிர் தரப்புகளின் நகர்வுகள்

இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்காக பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்க எதிர்க்கட்சிகள் பலவும் கவனம் செலுத்திவரும் நிலையில் உண்மையான பொது வேட்பாளர் நானே என்ற அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டிருக்கிறார். இலங்கையின் பெரும்பாலான கட்சிகள் தன்னை ஆதரிப்பதால் இந்தத் தேர்தலில் பொது வேட்பாளராகும் தகுதி தனக்கே இருப்பதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மக்கள் மத்தியில் கூடுதல் செல்வாக்கு தமக்கு இருப்பதாகவும் அதன்வழி இந்தத் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்பு தமக்கு இருப்பதையும் அவர் வெளிப்படுத்த தவறவில்லை.

பிந்தியதாக கிளிநொச்சி உதவி வழங்கும் நிகழ்வில் புலம்பெயர் தமிழர்களுடன் இணைந்து ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதில் தமிழ் கூட்டமைப்பினர் ஆர்வமாக இருப்பதாக குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி...

இவர்கள் பிரிவினைக்கான எண்ணத்தை கைவிடுவார்களாயின் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கும் முதல் ஆளாக நானே இருப்பேன் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது தெற்கு வாக்காளர் தன்னை ஏன் தெரிவு செய்ய வேண்டும் என்பதற்கு, வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சவடால் பேச்சுக்களுடன் இருந்துவருவதைக் காரணமாக்குகிறார்.

இதன்மூலம், கூட்டமைப்பின் இனவாதப் பேச்சுக்கள், எதற்கு இங்கே உதவிக் கொண்டிருக்கின்றன என்பதை நாம் கவனித்துக் கொள்ளலாம். மேலும், யாழ்ப்பாணத்துக்கான ஜனாதிபதி வருகையையும் அபிவிருத்திக்கான கூட்டத்தையும் தமிழ்க் கூட்டமைப்பு புறக்கணித்திருப்பது, இன்றைய தெற்கு நிலைமையில், மகிந்த மீண்டும் வெல்வதற்கு உதவும் நடவடிக்கையே ஒழிய, தமிழ் மக்களுக்கு இத்தகைய பகிஸ்கரிப்புகளால் ஆவதென்ன?

இதனிடையே, நாட்டின் ஜனநாயகத்துக்கு சவாலை ஏற்படுத்தி இருக்கும் ஜனாதிபதி முறையை மாற்றுவதற்கு விருப்பம் கொண்டிருக்கும் அனைத்து கட்சிகளையும் தம்முடன் இணையுமாறு ஐக்கிய தேசியக் கட்சி பகிரங்க அழைப்பு விடுத்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் நிறைவேற்று அதிகாரத்தை மறுதலிக்கும் 17ஆவது திருத்தத்தை மீண்டும் அமுலுக்கு கொண்டுவர ஜாதிக ஹெல உறுமய அரசாங்கத்தை வலியுறுத்தி இருக்கும் நிலையிலேயே ஐ.தே.க.இன் இந்த பிரத்தியேக அழைப்பு.

ஜனாதிபதி முறைமையில் மாற்றம் செய்யாது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாதென இடதுசாரி கட்சிகளும் தமது பங்குக்கு, காட்டமாக அறிவித்திருக்கின்றன.

நாடாளுமன்றத்துக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கும் வகையில் அரசியல் அமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளாது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் அது ஆளும் கட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பது அக்கட்சிகளின் வாதம்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக ரணிலை கட்சியின் வேட்பாளராக ஐ.தே.க. அறிவித்திருக்கும் அதேசமயம் அனைத்து எதிர்க்கட்சிகளுடனும் கூட்டொன்றை அமைக்க ரணில் மேற்கொள்ளும் முயற்சிகள் எதிர்பார்த்த பலனை அளிப்பதாக இல்லை.

இந்தக் கூட்டில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களுக்குப் பதில் இந்தக் கட்சிகளால் விரும்பப்படும் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதிலேயே பெரும்பாலான எதிர்க்கட்சிகள் கவனம் செலுத்தியுள்ளன.

வழமைக்கு மாறாக இம்முறை வடக்குக்கான உதவித்திட்டங்களுக்கு ஜனாதிபதி கூடுதல் முக்கியத்துவம் வழங்கி இருக்கும் நிலையில்... தமக்கான அரசியலை மட்டுப்படுத்தும் நோக்கில் தமது வட மாகாண சபை ஊடான அபிவிருத்திகளை

- சாலையூரான் -

புறந்தள்ளி மத்தியிலிருந்து அரசு திட்டங்களை முன்னெடுத்திருப்பதாக தமிழ் கூட்டமைப்பு குற்றம் சாட்டி இருக்கிறது.

யாழ்தேவியின் வடக்குக்கான பயணத்துடன் யாழ்ப்பாணத்தில் பல அபிவிருத்தி அங்குரார்ப்பண நிகழ்வுகளுக்காக ஜனாதிபதி பிரசன்னமானதை பிரதானமான ஒரு அபிவிருத்தி அரசியல் முன்னெடுப்பாக அவதானிகள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

இந்த முன்னெடுப்புகள் எதிர்வரும் தேர்தலில் அரசுக்கு வாக்காக மாறுமா அன்றி எதிர்க்கட்சியினர் குறிப்பிடும் மக்களின் வாழ்க்கை நெருக்கடிகள்தான் முன்நிலைப்படுத்தப்படுமா என்பதை சற்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



# கே.வி. மகாதேவன்



12

- பி.ஜி.எஸ்.மணியன் -

"நீலமலைத் திருடன்" வெளிவந்த அதே வருடம் - சொல்லப்போனால் "நீலமலைத் திருடன்" படத்துக்கு முன்னதாக கே.வி. மகாதேவனின் அற்புதமான இசை அமைப்பில் வெளிவந்த படம் தான் "ராஜராஜன்".

எம்.ஜி.ஆர். - பத்மினி நடித்த இந்தப் படத்தில் எம்.என். நம்பியார், பி.எஸ். வீரப்பா, லலிதா, எம்.ஜி. சக்ரபாணி ஆகியோரும் நடித்திருந்தனர்.

கே.வி. மகாதேவனின் சிறந்த இசைக்காகவே பேசப்பட்ட படம்.

ஆரம்ப காலப்படங்களில் எம்.எம். மாரியப்பாதான் எம்.ஜி.ஆருக்காக முதலில் பின்னணி பாடியவர்.

அவருக்கு அடுத்து ஐம்பதுகளின் இறுதி-வரை அவருக்காக பாடியவர் சீர்காழி கோவிந்தராஜன் தான்.

இந்தப் படத்தில் கவிஞர் கு.சா. கிருஷ்ண மூர்த்தி எழுதி எம்.ஜி.ஆருக்காக சீர்காழி கோவிந்தராஜனும், பத்மினிக்காக ஏ.பி. கோமளாவும் பாடிய பாடல் ஒன்று இன்றுவரை காலத்தை வென்று நிலைத்து நிற்கிறது.

"நிலவோடு வான் முகில் விளையாடுதே" இந்தப் பாடலை வெகு அற்புதமான யமன்கல்யாணி ராகத்தில் அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன்.

இந்த இடத்தில் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக திரைப்படப் பாடல்களில் சுத்தமான கர்நாடக சங்கீதம் என்பது எம்.கே. தியாகராஜ பாகவதர் காலத்தோடு வழக்கத்தில் இருந்து மறைந்துவிட்டது. அதற்குப் பிறகு ராகங்களின் அடிப்படையில் பாடல்கள் வர ஆரம்பித்தன. அதாவது குறிப்பிட்ட ராகத்தின் ஸ்வரங்களை எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் கிராமிய மெட்டுக்களையோ அல்லது மேற்கத்திய இசையையோ கலந்து கொடுக்க ஆரம்பித்த காலகட்டம் அது. என்றாலும் கையாள எடுத்துக்கொண்ட ராகத்திலிருந்து மாறாமல் அதை அனுசரித்தே பாடல்கள் அமைந்தன.

அந்த வகையில் இந்த "நிலவோடு வான் முகில் விளையாடுதே" பாடல் கே.வி. மகாதேவனின் இசை மகுடத்தில் ஒரு வைரக்கல் என்றால் அது மிகை அல்ல.

கர்நாடக இசை மேதை, காலம் சென்ற ஜி.என். பாலசுப்ரமணியம் அவர்களது பிரபலமான பாடலான "ராதா சமேதா கிருஷ்ணா" என்ற பாடல் இதே மிஸ்ர யமன் ராகத்தில் அமைந்த பாடல் தான்.




"நிலவோடு வான் முகில் விளையாடுதே" பாடல் முதல் நாள் மாலையில் ஒலிப்பதிவு ஆரம்பித்து விடிய விடிய அனைவரும் உழைத்து மறுநாள் காலையில் முடிந்த பாடல் - என்று அதனை சீர்காழியுடன் பாடிய பாடகி ஏ.பி. கோமளா ஒரு நேர்காணலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பாடலைக் கேட்கும்போது வான்முகில் நிலவோடு மட்டும் விளையாடவில்லை. நம் மனங்களோடும் விளையாடுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

அடுத்து "ஆடும் அழகே அழகு" லலிதா- பத்மினி இணைந்து ஆடும் நடனத்துக்கான பாடல்.

பி. லீலா - சூலமங்கலம் ராஜலக்ஷ்மி இருவரும் பாடிய இந்தப் பாடலை இயற்றியவர் யார் தெரியுமா? கே.வி. மகாதேவனின் உதவியாளராக இருந்த டி.கே. புகழந்தி.

இந்த நடனப் பாடலை ஒரு ராகமாலிகையாக விஜய நாகரி, நடபைரவி, குந்தலவராளி, சிந்துபைரவி ஆகிய ராகங்களில் அமைத்திருக்கிறார் கே.வி. மகாதேவன். சுத்தமான கர்நாடக சங்கீதத்தில் அமைந்த இந்தப் பாடலின் ஒவ்வொரு சரணங்களுக்கும் இடையில் வரும் இணைப்பிசையும், ஒரு ராகத்திலிருந்து இன்னொரு ராகத்துக்கு மாறும் அழகும்.. மகா-தேவனின் திறமைக்கு அற்புதமான சான்று.

இதே போல இன்னொரு டூயட் - "இதயம் தன்னையே எனது இதயம் நாடுதே" - சீர்காழி கோவிந்தராஜன் - ஏ.பி. கோமளாவின் குரல்களில் உற்சாகப் பாடலாக அமைந்திருக்கிறது. ஆபேரி ராகத்தின் அடிப்படையில் அமைத்திருக்கிறார். பொதுவாக திரை இசையில் அதிகம் பயன்படுத்தப்படும் ராகம் இது. ஹிந்துஸ்தானியில் பீம்ப்ளாஸ் என்று இதனைச் சொல்வார்கள்.

அடுத்து ஆர். பாலசரஸ்வதியின் தாலாட்டும் குரலில் "கலையாத ஆசைக் கனவே" என்ற சங்கராபரண ராகத்தின் அடிப்படையில் அமைந்த பாடல். படத்தில் உற்சாகமான சூழலிலும், சோகச் சூழலிலும் என்று இரண்டு முறை இந்தப் பாடல் இடம்பெறும். பாலசரஸ்வதியின் மென்மையான குரலில் மயிலறகால் மனதை வருடுவது போல வருடிச் செல்லும் பாடல் இது.

இப்படிப் பாடல்களுக்கு கர்நாடக இசையின் அடிப்படையில் இசை அமைப்பதை பெரிதும் விரும்பினார் கே.வி. மகாதேவன்.

"திரை இசைப் பாடல்களுக்கு நமது கர்நாடக இசை பொருந்துவதைப் போல வேறு எதுவும் பொருந்துவதில்லை" என்று தனது அபிப்பிராயத்தை "பொம்மை" மாத இதழுக்கு அளித்த பேட்டி ஒன்றிலும் தெரியப்படுத்தி இருக்கிறார்.

(தொடரும்)



# வாசிப்பு: சில பதிவுகள்

- சி.ரமேஷ் -

உடலுக்கு எப்படி உடற்பயிற்சியோ அது போல மனதுக்குப் பயிற்சி வாசிப்பு என்பார் சிக்மன்ட் ஃப்ரொய்ட்.

வாசிக்க முடியவில்லை என்பது அறிவுத்திறனின் பிரச்சினை அல்ல. ஒருவரின் இயல்பும் அல்ல. பழக்கம் இல்லாமலாகி விடுவதுதான் அது. அதை வெல்ல ஒரே வழி தொடர்ச்சியாக வாசிப்பதுதான்.

நாம் வாசிக்கும்போது ஒருவேளை ஆரம்பத்தில் வெறுமே தகவல்களை மட்டுமே கவனிக்கக்கூடிய வாசிப்பை நிகழ்த்தலாம். வெறுமே கதைச்சுவாரசியத்தை மட்டும் வாசித்துச் செல்லலாம். ஆனால் நாம் தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருந்தோமென்றால் மெல்லமெல்ல நம் அகம் மேலதிக வாசிப்பை நிகழ்த்த ஆரம்பித்திருப்பதைக் காண்போம். நாம் அதை வலிந்து செய்யவேண்டியதில்லை. அதுவே நிகழ ஆரம்பிக்கும். என்பார் ஜெயமோகன்.

மூளையின் செயல்பாட்டை அதிகரிக்க ஒரு வழி - நல்ல புத்தகங்கள் படிப்பது என்பார் சுஜாதா.

எனவே சிந்தனையை மன ஆரோக்கியத்தை வளர்த்துக்கொள்ள வாசிப்பு உதவுகிறது. வாசிப்பதனூடாக அகம் தூய்மையடைகிறது. உலகத்தைப் பார்ப்பதற்கான ஒரு கண்ணாக வாசிப்பு காணப்படுகிறது. ஒரு மனிதன் இன்னொரு மனிதனை புரிந்து கொள்ளவும் மனித வாழ்க்கைமுறையை அறிந்து கொள்ளவும் புத்தகங்கள் வழிகாட்டுகின்றன.

வாசிப்பு என்பது எழுத்துக்களைப் புரிந்து கொண்டு சொற்களை அறிந்து கொள்வதற்கும் கருத்துக்களை தெளிவாக விளங்கிக் கொள்வதற்கும் உதவுகின்றது. கையெழுத்தில் அல்லது அச்செழுத்தில் உள்ளதைக் கண்களால் கண்டு வாயால் உச்சரித்துக் சொல்லின் பொருள் உணர்வதே வாசிப்பு அல்லது படிப்பு என்பது டாக்டர் ந.சுப்புரெட்டியார் என்பவரின் கருத்தாகும்.

வாசிப்பானது காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் என்ற மூவகை கூறுகளை உள்ளடக்கியது.

வாசிப்பு குறித்து செ.வை.சண்முகம் கூறும்போது, வாசிப்பு ஆழ்ந்து கற்றல் (Close study), வாய்விட்டு வாசித்தல் (Reading) என்று இரண்டு பொருளில் கையாளப்படுகிறது. வாசிப்பு கோட்பாடு என்பது மூன்று வகையில் நோக்கப்படுகிறது.

1. வாசகர் யார்?

2. வாசிப்பின் பொருள் எங்கே உள்ளது...? நூலிலா அல்லது வாசகரிடத்திலா...

3. வாசிப்பு என்பது எந்த வகையான அனுபவத்தை தரும்?

செ.வை.சண்முகம் வாசகரை பொழுதுபோக்குக்காகப் படிப்பவர், ஒரு தேவையை மனதில் கொண்டு படிப்பவர், அந்த நூலை ஆராய்வதற்காகப் படிப்பவர் என்று பல வகையாக பகுத்து நோக்குவார்.

அப்படியே வாசிப்புநோக்கில் வாசகர்களைப் பொதுவாகக் கற்பித - லட்சிய வாசகர்கள் (Hypothetical - Ideal readers) உண்மையான வாசகர்கள் (Real Readers) என்று இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கிறார்கள்.

கற்பித - லட்சிய வாசகர்கள் (Hypothetical - Ideal readers) என்ற பிரிவில் விமர்சகரும், கேட்போரும் - அதாவது ஆசிரியர் யாரை முன்னிறுத்தி நூலைப் படைத்துள்ளாரோ, அவர்களும் தூதுவராக, தரகராக இருப்பவர்கள்.

நுண்ணிய வாசகர் (Implied Reader) என்பது ஒரு வகை. நூலுக்குள் அந்த நூலை வாசிக்கும் முறையைக் கண்டறிய முயலுபவர் அல்லது ஒரு நூலை வாசிக்கும் முறையை ஆய்பவர்கள் இந்த வகையைச் சேர்ந்தவர்கள்.

கற்றல், வாசித்தல் இரண்டும் வெவ்வேறு பொருள் சார்ந்தது. கற்றல் என்பது ஒன்றைத் தெரிந்து கொள்வதற்காகப் படித்தல் என்றும் வாசித்தல் என்பது தெரிந்ததையே மறுபடியும் மறுபடியும் படிப்பது என்றும் பொருள் கொள்ளலாம்.

"பிற்றை நிலைமுனியாது கற்றல் நன்று" என புறத்திணை கூறும். அதாவது ஆசிரியரைச் சென்றடைந்து அவனை வழிபட்டு தன்நிலை வழுவாது பணிந்து கற்றலே அழகாகும். உடையார் முன் இல்லார் போல எக்கற்றும் கற்றாரே கற்றார் என வள்ளுவர் கூறுவார்.

"மனிதர்கள் கல்வி கற்க வேண்டும் ஏனெனில் அவர்கள் மனிதர்கள் என்கின்றது" ரஷ்ய பழமொழி. எனவே எம்மை துலங்க வைக்கும் அறிவுசார் அக்கல்விக்கு அடிப்படையாக அமையும் வாசிப்பை முயன்று நிலைப்படுத்தி கொள்ளவேண்டும்.

வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளாவிட்டால் மனிதனால் சிந்திக்க முடியாது. அறிவு வளர வாசிப்பு அவசியம். வாசிக்க வாசிக்க மனிதனுடைய சிந்தனை வளரும். உலகிலுள்ள அனைத்து வகை துயரங்களுக்கான விடுதலை நூலில் உள்ளது என்பார் கூ.கி. தியாங்கோ. எனவே கவலையை மறக்க வாசிக்கும் மனிதன் விவேகியாகின்றான்.

எட்வின் பி.விப்பிளின் நோக்குக்கமைய காலக் கடலில் நமக்க வழிகாட்ட அமைக்கப்பட்ட கலங்கரை விளக்காகிய நூல்களைப் போற்றிடவேண்டும். "காந்தியின் சத்திய சோதனையைப் படித்த பின்புதான் கறுப்பர் இன விடுதலைக்காகப் போராடும் எண்ணம் உதித்தது" என்றார் நெல்சன் மண்டேலா. அதேபோல் தூக்குக் கயிற்றை முத்தமிடும் கடைசி நாள் வரையிலும்கூட லெனின் நூல்களைப் படித்துக் கொண்டு இருந்தார் பகத்சிங்.

ஹென்றிதொறோ கூறுவது போல ஒரு நாட்டின் வருங்கால சந்ததியினர் தேடித்தேடி அடையவேண்டிய அற்புத புதையல்களாகிய நூல்களைக் கண்டடைய வேண்டும். வாசிப்பு குறைந்தால், வாழ்க்கையின் அர்த்தமே அகப்படாமல் போய்விடும். வாசிப்பது, தொடர்ந்து அது பற்றி விவாதிப்பது என்பது மிகவும் உவகையூட்டும் ஒரு செயல்.

வாழ்நாள் முழுதும் கற்றல் (life long learning) என்னும் கருத்தாக்கம் மனித வாழ்வுக்கு இசைவானதொன்று. எனவே கற்றலுக்கு அடிப்படையானதும் சிந்தனை செழிப்புறுவதற்கு அவசியமானதுமான வாசிப்புடைய சமூகத்தை உருவாக்கவேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

# வாசிப்பு

- ஜெயமோகன் -



நான் ஒருமுறை ஒரு உணவகத்தில் சாப்பிட்டேன். அந்த உணவகம் மூங்கிலால் ஆனது. நாற்காலிகள் மூங்கில். சாப்பிடும் தட்டு மூங்கில். ஸ்பூன்கள் மூங்கில். சாப்பிடும் எல்லா உணவுகளும் மூங்கில்தான். The Bamboo" என்று அதற்குப் பெயர். அதே போல இலக்கியத்தின் வடிவமும் உள்ளடக்கமும் எல்லாம் அதன் மொழிதான்.

இலக்கியப்படைப்பின் உணர்ச்சிகள், காட்சிகள், தரிசனங்கள் எல்லாமே அதன் தனி மொழியில்தான் உள்ளன. மொழிதான் இலக்கிய ஆக்கம். ஒரு குறிப்பிட்டவகையில் ஒன்றைச் சொல்வதன் மூலம்தான் ஒரு தரிசனத்தை முன்வைக்கிறது. ஒரு மொழியனுபவமாக ஆகாத எழுத்து இலக்கிய அனுபவமாக ஆகவில்லை என்றே பொருள்.

ஓர் இலக்கிய ஆக்கத்தில் உள்ள தரிசனம் எதுவோ அது அந்த படைப்பின் சிறப்பான மொழியமைப்பில் எங்கும் எல்லா வரிகளிலும் ஏதோ ஒரு வகையில் ஒளிவிட்டுக்கொண்டே இருக்கும். கல்பற்றா நாராயணனின் நாவலில் ஒரு வரி. கணவன் நடக்கச்செல்கிறான். அந்நேரத்தில் மனைவி இறந்துவிடுகிறாள். அவன் வழக்கமாக வருவதை விட இரண்டு மணி நேரம் தாமதமாக திரும்பி வந்தான். "ஆகவே அவள் உள்ள உலகில் மேலும் இரண்டு மணிநேரம் வாழ அவனால் முடிந்தது" அந்த வரி அளிக்கும் மனத்தூண்டல் evocation தான் அந்நாவலின் தரிசனமாக மொத்த நாவலிலும் விரவி ஒளி விடுகிறது.

எந்த ஒரு இலக்கிய ஆக்கத்தையும் அதன் நுண்மைகளை தொட்டறியும் நுண்வாசிப்பு (micro reading) மூலமே முதலில் அணுகவேண்டும். முதலில் தொட்டுப்பார்த்து அதற்கு உயிருள்ளதா இல்லை மண்ணா என்று தெரிந்துகொள்வது போலத்தான் இது. அதன் அத்தனை விரிவாக்கங்களும் அதன் பின்னால் வருவனவே.

இன்றைய வாசிப்பில் மிகமிகக் குறைவாக நிகழ்வது இந்த நுண்வாசிப்புதான். ஆகவேதான் தன் அகம் புரிந்துகொள்ளப்படவில்லை என்ற பெரும் துயரத்தை எழுத்தாளன் அடைகிறான். ஒரு படைப்பாளியிடம் சென்று "உங்கள் படைப்பு மூன்றாம் உலக மக்களின் அக நெருக்கடிகளுக்குள் சென்று புதிய சாத்தியக்கூறுகளைக் காட்டுகிறது" என்று சொல்லுங்கள். "அப்படியா?" என்பான் தர்மசங்கடத்துடன். அவன் படைப்பில் உள்ள ஒரு சிறு நுட்பத்தை சுட்டிக்காட்டுங்கள், அவன் முகம் மலர்வான்.

ஏனென்றால் நுட்பத்தில்தான் படைப்பூக்கம் உள்ளது. அது கடவுளே ஆனாலும் சரி. கலையும் கடவுளும் நுட்பங்களில்தான். God is in details. ஒரு எறும்பைக் கூர்ந்து நோக்கி அதனால் இரு பின்னங்கால்களில் மொத்த உடலையே தூக்க முடியும் என்று கண்டு "கடவுளே" என்று கூவும்போது உங்களுக்கு மிக அருகே கடவுள் நின்றுகொண்டு புன்னகை செய்வார்.









சொல்ல என்ன இருக்கிறது... பார்த்துக் கொள்ளுங்கள்.




# நூற்றாண்டைத் தாண்டி வீறுநடைபோடும் மகாஜனக் கல்லூரி

## கல்லூரி வரலாறு

இலங்கையில் மேற்குலக காலனித்துவ ஆட்சிக்காலப்பகுதியில், காலனித்துவ அரசாங்கத்தினால் கத்தோலிக்க பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு அப்பாடசாலைகள் கல்வியில முன்னிலைப்படுத்தப்பட்டதுடன் அப்பாடசாலைகளில் ஆங்கிலக் கல்வியினைத் தொடர்வதற்கு வாய்ப்பளிக்கப் பட்டதுடன் சைவத் தமிழ் மக்களுக்குப் பாரபட்சமும் காட்டப்பட்டது. இக்காலகட்டத்தில் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக கடமையாற்றிவந்த பாவலர் தெ.துரையப் பாப்பிள்ளை சைவத் தமிழ் மக்களும் ஆங்கில மொழிப் புலமை பெற்று அவர்களும் வேலை வாய்ப்புக்களைப் பெறவேண்டும் என்ற நற்சிந்தனையோடு, தனது ஆசிரிய பதவியினையும் துறந்து, போதிய பண வசதியோ இட வசதியோ அற்ற நிலைமையிலும் தனது அறிவாற்றலையும் தன்னம்பிக்கையையும் மட்டுமே மூலதனமாகக் கொண்டு தெல்லிப்பளையிலுள்ள அவரது வீட்டில் 1910 ஆம் ஆண்டு வைகாசி மாதம் மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரியை நிறுவி, அரச உதவிகள் கிடைக்கப் பெறாத நிலையிலும், தமிழ் மக்களின் நிதியுதவியுடன் அமெரிக்க மிசன் பாடசாலைகளுக்கு நிக ராகக் கல்லூரியை திறம்பட நடாத்திவந்தார்.



அதிபர்
ம.மணிசேகரம்

இரண்டு வருடங்கள் பாவலர் இல்லத்தில் இயங்கி வந்த மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி, 1912 ஆம் ஆண்டு ஆவணி மாதம் நல்லுள்ளம் கொண்டோரது நிதியுதவியுடன் தற்போது கல்லூரி இயங்கிக்கொண்டிருக்கும் இடமான அம்பனை, தெல்லிப்பளை என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. பல தடவைகள் அரச உதவி பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும், 1919 ஆம் ஆண்டிலேயே முதல் அரச உதவி கிடைக்கப்பெற்றது. தொடர்ந்து, மகாஜன உயர்தர ஆங்கிலக் கல்லூரி வளாகத்தினுள் இயங்கிவந்த சரஸ்வதி தமிழ் பாடசாலை, மகாஜனக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டு ஆரம்ப வகுப்பிலிருந்து உயர்தர வகுப்புவரை நிறுவப்பட்டது.

மகாஜனக் கல்லூரி ஸ்தாபகரான பாவலர் தெ.துரையப்பாப்பிள்ளை 24.06.1929 காலமானார். அவரை நன்றியுடன் நினைவுகூரும் முகமாக ஆண்டு தோறும் அவர் இறந்த தினமான ஆனி 24 ஆம் திகதி ஸ்தாபகர் தினம் நினைவு கூரப்பட்டு வருகின்றது. ஸ்தாபகரின் மறைவைத் தொடர்ந்து, கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகக் கடமையாற்றிவந்த சின்னப்பா அதிபராகக் கடமையேற்று, பாவலர் வழியில் பாடசாலையைத் திறம்பட வழி நடாத்தி வந்தார். 1936 ஆம் ஆண்டு கல்லூரியில் சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன், 1943 ஆம் ஆண்டு கல்லூரியில் பெண்கள் கல்விகற்பதற்கான இட ஒதுக்கீடும் செய்யப்பட்டது அத்துடன் இராஜ மலர் சின்னையா கல்லூரியின் முதலாவது ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். அதிபர் திரு. சின்னப்பா 1941 ஆம் ஆண்டு நவீன விஞ்ஞானக் கல்வி கற்பிக்கும் வசதியினை கல்லூரியில் ஏற்படுத்தினார். இதுவரை 160 ஆகவிருந்த கல்லூரி மாணவர் தொகை, இவரது காலப்பகுதியில் 300 ஆக உயர்வடைந்தது. தொடர்ந்து, 17.07.1945 அன்று சின்னப்பா அதிபர் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டார்.




பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் வடமாகாண பாடசாலைகளுக்கான மெய்வல்லுநர் போட்டியில் பதக்கம் பெற்ற மகாஜன மைந்தர்களான வி.சுசந்திகா 17 வயது பளுதூக்கல் (70கிலோ 2ஆம் இடம்), பி.ரிசோத் 21 வயது கோலூன்றிப்பாய்தல் (3.95 1ஆம் இடம்), ஜெ.ஜனந்தன் (21 வயது கோலூன்றிப்பாய்தல் 3.70 வர்ணவிருது),யு.சுயூசாந் (17 வயது தட்டெறிதல் 46.32 வர்ணவிருது),எஸ்.டினேஷ் (17 வயது கோலூன்றிப்பாய்தல் 3.65 வர்ணவிருது), ஜெ.அனித்தா (21 வயது கோலூன்றிப்பாய்தல் 3.32 1ஆம் இடம் இலங்கை சாதனை), எஸ். டிலானி (17வயது கோலூன்றிப்பாய்தல் 2.50 2ஆம் இடம்)

அவரைத்தொடர்ந்து, கல்லூரியின் பழைய மாணவரும், 1932 ஆம் ஆண்டிலிருந்து கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றியவரும், கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப் பாப்பிள்ளையின் புதல்வருமான தெ. து. ஜெயரத் தினம் 03.09.1945 இல் கல்லூரி அதிபராகக் கடமையேற்றுக்கொண்டார். இவரது காலப்பகுதியே மகாஜனக் கல்லூரியின் பொற்காலமாகும். கல்லூரி சகல துறைகளிலும் அபார வளர்ச்சி பெற்று 2000 மாணவர்கள்வரை கல்விகற்கக்கூடிய வசதிகொண்ட கல்லூரியாக வளர்ச்சி கண்டதுடன், இலங்கைத்தீவின் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக உயர்ந்தது.




பிரதி அதிபர்
சு.சயந்தன்

நிர்வாகக் கட்டமைப்பு, கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் போன்றவற்றில் கல்லூரி சிறப்புற்று விளங்கியது. அத்துடன் புதிய வகுப்பறைக் கட்டடங்கள், விளையாட்டுமைதானம், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், நூலகம், கைவினை, மனையியல் மற்றும் நடனம் ஆகிய பாடங்களுக்கான நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், தேனீர்ச்சாலை மற்றும் புத்தகசாலை என கல்லூரியின் வளர்ச்சி பார்ப்போர் வியக்கும் வண்ணமிருந்தது. அதுமட்டுமன்றி, மகாஜனன் என்ற வருடாந்த மலர் வெளியீட்டினையும் தொடக்கி வைத்தவர் அதிபர் தெ. து. ஜெயரத்தினம் அவர்களேயாவார். இதன் காரணமாக அதிபர். தெ. து. ஜெயரத்தினம் மகாஜன சிற்பி எனப் போற்றப்படுகின்றார்.



2012உயிரியல் பிரிவில் தோற்றி மாவட்ட மட்டத்திலும் ஏழாவது இடத்தில் வந்து கொழும்பு மருத்துவ பீடத்திற்கு தெரிவான இக் கல்லூரி மாணவன் சச்சி தானந்தசிவம் வேணிலன் கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார். இவர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 8A,B பெற்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

## மகாஜனவின் சாதனை மாணவி



தேசிய மட்டத்தில் நடை பெற்ற கோலூன்றிப்பாய்தல் போட்டியில் 19 வயதிற்குட்பட்ட பிரிவில் மகாஜனக்கல்லூரி மாணவி ஜெகதீஸ்வரன் அனித்தா முதலாம் இடத்தினைப் பெற்றுள்ளார். இவர் தங்கப் பதக்கத்தினைக் கைப்பற்றி பாடசாலைக்கு பெருமை சேர்த்ததோடு தேசிய மட்டத்தில் அதி உயர் புள்ளிகளை பதிவுசெய்து உயாந்த சாதனையையும் படைததுள்ளார். அனித்தா கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் 19வயதிற்கு உட்பட்ட பெண்களிற்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் பங்கேற்று 3.32 மீற்றர் உயரத்தை மிக இலகுவாக தாண்டி இந்த சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



மகாஜனக்கல்லூரி பெண்கள் சாரணர்கள்



பெண்கள் கால்பந்தாட்ட அணி

# இந்துக்களுக்கு விரதங்கள் மறுவாழ்வுக்கு இன்றியமையாதவை

## ஆசிரிய ஆலோசகர் ஸ்ரீந்திரன் தெரிவிப்பு

இந்துக்களின் விரதங்களும், பண்டிகைகளும், இந்துக்களது இவ்உலக வாழ்விற்கும் மறுஉலக வாழ்விற்கும் வழிகாட்டுபவையாக அமைகின்றன. அது மட்டுமன்றி சமூக நோக்கில் மனிதவாழ்வின அடிப்படைத் தேவைகளாக வீரம், செல்வம், கல்வி எனும்முப்பெரும் செல்வங்களும் காணப்படுகின்றன.

இந்தப் பூவுலகில் வாழ்வதற்கு இந்த முப்பெரும் செல்வங்களும் இன்றியமையாதவை.

எனவே தான் எமது முன்னோர்கள் மூன்று பெரும் செல்வங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து இச் செல்வங்களைத் தந்தருளும் கடவுளர்களாக முறையே துர்க்கை இலட்சுமி, சரஸ்வதி ஆகிய முப்பெரும் தேவியர்களை வழிபடுதெய்வங்களாக உருவகித்துத் தந்துள்ளனர்.

இவ்வாறு யாழ். மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற வாணி விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஆசிரிய ஆலோசகர் என்.பி.ஸ்ரீந்திரன் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், இந்து சமயத்திலே பல பண்டிகைகள் காணபடினும், நவராத்திரி விழாவே மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவதைக் காணலாம்.

இதற்குகாரணம் இப்பண்டிகை மட்டுமே, விரதமாகவும், பண்டிகையாகவும் கொண்டாடப்படும் சிறப்பிற்குரியது.

அது மட்டுமன்றி ஏனைய பண்டிகைகள் வீட்டிலும், ஆலயங்களிலும் கொண்டாடக்கூடியதாக இருந்துவர, நவராத்திரிப் பண்டிகை மட்டுமே வீடு, ஆலயங்களில் மட்டுமன்றி, பாடசாலைகள், கல்வித்திணைக்களங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், நாடாளுமன்றம், தொலைக்காட்சி நிலையங்கள், வானொலி நிலையங்கள் என அனைத்து இடங்களிலும், வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டுவருவதைக் காணலாம் என்றார். (06)

## கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் இரத்ததான நிகழ்வு



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ஆசிரியர் தின விழா நேற்று முன்தினம் மாணவர் மன்றத் தலைவர் ம.சயந்தறூபன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் ஆசிரியர் தினத்தைக் கௌரவிக்கும் வகையில் ஐம்பத்து மூன்று ஆசிரிய மாணவர்களும் விரிவுரையாளர்களுள் சிலரும் இரத்ததானம் வழங்கினர்.

ஆசிரியர் சமூகத்திற்கு தன்னை அர்ப்பணிப்பதுடன் உயிர் காக்கவும் உதவுபவன் என்பதை இந்த இரத்ததான முகாம் மூலம் ஆசிரிய மாணவர்கள் உணர்த்தி அன்றைய நாளைப் பெருமைப்படுத்தியிருப்பதாக கலாசாலையின் விரிவுரையாளர் குழுத் தலைவர் வி.எஸ்.குணசீலன் தெரிவித்தார். (48)

## ஆங்கிலம் கற்பதற்கான வழிமுறைக் கருத்தரங்கு

(காரைநகர் நிருபர்)

யாழ்ப்பாணம் சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனம் நடாத்தும் இலகுவில்ஆங்கிலம் கற்பதற்கான வழிமுறைகள் தொடர்பான கருத்தரங்கு எதிர்வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் இந்துக்கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 25 வருடங்களாக சேவையாற்றிய திருமதி ரமணி சிவபாலன் இக் கருத்தரங்கில் வளவாளராக வருகை தந்து இலகுவில் ஆங்கிலம் கற்பதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கமளிக்கவுள்ளார்.

இக்கருத்தரங்கில் ஆரம்ப பிரிவு ஆசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற முடியுமென சின்மய கிராமிய அபிவிருத்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. (10)

## வெள்ளி நற்சிந்தனை...

## உபதேசம்

திருமுறைகள் பன்னிரெண்டிலும் ஒன்றாகக் கருதப்படும் திருமந்திரம் சைவ நீதிகளையே விளக்குகின்றது எனக் கூற விழைந்தாலும் சைவ நீதி எனும் போது சைவர்கள் கூறும் "உலகியல் நீதி" என்பது பொருளன்று. சிவானந்தத்தைத் தலைப்படச் செய்யும் "நீதியினையே" கூறுவதாகக் கொள்ள வேண்டும்.

திருமந்திரத்தில் உள்ள தலைப்புக்கள் பலவும் நீதி நூல்களில் காணப்படும் தலைப்புக்களே. தமிழில் நீதி நூல்கள் பலவும் சமயச் சார்புடையனவே. திருக்குறள், நாலடியார் போன்ற நூல்களைப் பல சமயத்தவர்களும் பாராட்டினாலும் அவை சமய சார்பற்றவை எனக்கூறி விட முடியாது.

தெளிந்த சமய அடிப்படையில் எழுந்த நீதி நூல்களில் காணும் தலைப்புக்களிலேயே திருமூலரும் கருத்துக்களை வெளிப்படுத்தினும் அந்நீதி நூல்கள் கூறியவற்றையே திருமூலரும் கூறுவதாகக் கருத முடியாது. திருமூலர் தமக்குரிய தனித்தன்மையோடு நீதிகளை விளக்குகின்றார்.

திருமந்திரத்தின் முதலாம் மந்திரத்தில் இருபத்திநான்கு தலைப்புக்கள் உள்ளன. இவற்றுள் உபதேசம் என்பது முதல் தலைப்பாகும். உபதேசம் என்றதும் குருவின் சிந்தனை ஏற்படுதல் இயல்பு பக்குவப்பட்ட ஒருவருக்கு இறைவனே குருவாக எழுந்தருள்வான். திருவருள் காட்டிக் களிம்பறுப்பான்: மலத்தைப் போக்குவான் ஞானத்தைத் தருவான் என்பர்.

சூரிய காந்திக்கல் சூரியன் முன்னிலையில் பஞ்சைச் சுட்டெரிப்பது போல் உயிரறியும் குருவின திருமுன்பு மலத்தைச் சுட்டெரிக்க வல்லது எனக் குருவின் பணியினை விளக்குவார்.

தெளிவு குருவின் திருமேனி காண்டல்.
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருமேனி திருவார்த்தை
கேட்டல்
தெளிவு குருவுருச் சிந்தித்தல் தானே

குருவின் உருவம் கண்டு அவர் நாமத்தை ஒவ்வொரு வினாடியும் நினைத்து திருவார்த்தையைக் கேட்டுச் சிந்தித்து உண்மை ஞானம் பெற வேண்டும். சரியான குருவின் உபதேசம் ஒன்றே நமக்கு சிறந்த வழிகாட்டலாக அமையும்.

**சொல்லின் செல்வர்**
**இரா.செல்வவடிவேல்**

## பதிவிறக்கப் பெட்டகம்

புகழ் என்பதுதான் என்ன? நமக்குத் தெரியாதவர்களும் நம்மைத் தெரிந்து வைத்திருப்பதிலுள்ள சுகம்தானே? அனுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் அதன் அருமை தெரியும். அபார சுகம்தான் அது சந்தேகமே இல்லை. ரோட்டில் நடந்து செல்கிற பொழுது பின்னாலிருந்து தன்னைச் சுட்டிக்காட்டி இன்னார் எனக் குசுகுசுத்து அறிமுகப்படுத்தும் குரல் காதில் விழுந்தும், விழாத பாவனையில் சென்றுவிடுகிற சுகம் லேசானதா? புகைப்படத்தோடு பேச்சு தினசரிகளில் பிரசுரமாகிற பொழுது ஒரு பேரானந்த நிலை ஏற்படத்தான் செய்கிறது. மேலுக்கு எல்லாம் துறந்துவிட்டதுபோல் காட்டிக் கொள்வது யாரால்தான் முடியாது? சுகம் சுகம்தான். கழுத்தில் மாலை விழுகிற பொழுது புல்லரிக்கத்தான் செய்கிறது. கரகோஷம் காதில் விழுகிற பொழுதும் அப்படித்தான்.

**– 'ஒரு புளியமரத்தின் கதை'யில் சுந்தர ராமசாமி**

1970–இல் சென்னையில் நடந்த சம்பவம் இது. நடிகர் ராஜேஷ் கன்னா உச்சத்தில் இருந்த கால கட்டம். படப்பிடிப்பு முடிய நள்ளிரவு ஆகி விட்டது. அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்பிய போது அவரைப் பார்ப்பதற்காக அந்த நள்ளிரவிலும் 200 கல்லூரி மாணவிகள் காத்திருந்ததாக சென்னை தினசரிகளில் செய்தி வந்திருந்தது.

இப்போது அவர் இடத்தை ரிஷி கபூரின் மகன் ரன்பீர் கபூர் பிடித்திருக்கிறார். இதே போல் தமிழில் எம்.கே.டி. பாகவதர் – பி.யு. சின்னப்பா, எம்ஜியார் – சிவாஜி, ரஜினி – கமல், விஜய் – அஜித் என்று போய்க் கொண்டே இருக்கும். இவர்கள் அனைவருமே மக்களை சந்தோஷப்படுத்துபவர்கள் (entertainers). ஆனால் எழுத்தாளன் என்பவன் மக்களை சந்தோஷப்படுத்துபவன் அல்ல.

கபிலனும் கம்பனும் இளங்கோவும் வள்ளுவனும் மக்களை சந்தோஷப்படுத்துவதற்காகவா எழுதினார்கள்? ராஜேஷ் கன்னாவைக் கொண்டாடிய வட இந்தியாவில் இப்போது அவர் பெயரே யாருக்கும் தெரியாது; இங்கே எம்.கே.டி., பி.யு. சின்னப்பாவின் பெயர் தெரியாததைப் போல. ஆனால் அங்கே பிரேம் சந்தின் பெயரும் நிர்மல் வர்மாவின் பெயரும் தெரியும். உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் நீங்கள் சாப்பிட ஹோட்டலுக்குச் செல்லும் போது சர்வரிடம், உனக்கு பாரதியைத் தெரியுமா என்று கேட்டுப் பாருங்கள். தெரியும் என்பது மட்டும் அல்ல; பாரதியின் பாடல்களில் கூட ஒன்றிரண்டை அவர் சொல்லுவார். ஆனால் பாகவதர், பி.யு. சின்னப்பா? ம்ஹூம்.

மக்களுக்கு ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒவ்வொரு கேளிக்கையாளர் வேண்டும். ஒரு தலைமுறையின் கேளிக்கையாளரை அடுத்த தலைமுறை ஒதுக்கித் தள்ளி விடும். பாகவதரின் பாடலைப் போட்டால் என் மகன் என்னை அடிக்க வருவான். எனவே எந்தக் காலத்திலும் நடிகர்களையும் எழுத்தாளர்களையும் ஒப்பிட முடியாது.

அல்ஜீரியாவின் விடுதலைப் போராளிகள் ஃப்ரான்ஸின் காலனி ஆதிக்கத்தை எதிர்த்து வன்முறைப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பள்ளிக்குச் செல்லும் [ஃப்ரெஞ்ச்] குழந்தைகள் கூட கொல்லப்பட்ட சம்பவம் எல்லாம் நடந்தது. அல்ஜீரியாவின் வன்முறையை ஃப்ரான்ஸே எதிர்த்த நேரத்தில் அவர்களின் விடுதலைப் போராட்டத்தை ஜான் போல் சார்த்ர் ஆதரித்தார். "சார்த்ர் ஒரு தேசத் துரோகி, அவரைக் கைது செய்யுங்கள்" என்று ஃப்ரான்ஸில் பலரும் சொன்ன போது அப்போதைய ஃப்ரெஞ்ச் அதிபர் சார்ல்ஸ் தெ கோல் சொன்னார், "வோல்டேரை யாரும் கைது செய்ய முடியாது" என்று. அதாவது நம்முடைய ஆசான்களை எப்படிக் கைது செய்ய முடியும் என்று பொருள். எழுத்தாளன் என்பவன் அந்த இடத்தில் இருப்பவன். **– சாரு நிவேதிதா**

இந்நூற்றாண்டின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பை நிகழ்த்தியவர் கார்ல் மார்க்ஸோ, சிக்மன்ட் ஃபிராய்டோ அல்ல. மாறாக ஃபிளாபெர்ட். மனித இயல்பின் தவிர்க்க இயலாத ஒரு பகுதியாக மடத்தனம் ஒளிந்துள்ளது என்பதை மேடம் பொவாரியின் வாயிலாக நமக்குக் கண்டுபிடித்துச் சொன்னவர் அவர். ஃபிளாபெர்டிற்கு முன் மடத்தனத்தை அறியாமை என்றே மேற்குலகு புரிந்துகொண்டிருந்தது.

**– மிலன் குந்தேரா**

எந்தவொரு விஞ்ஞானியையும் விட, ஏன் கணிதத்தின் புதிர்களை விலக்கிய மாமேதை கௌஸையும் விட நான் அதிகம் பெற்றுக்கொண்டது டொஸ்ரோயெவ்ஸ்கியிடம் இருந்துதான். **– அல்பேர்ட் ஐன்ஸ்டீன்**

# தேசிய மரநடுகை தினத்தில் பயன்தரு மரங்கள் நாட்டல்



வவுனியா நகர வரியிறுப்பாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் தேசிய மரநடுகை தினமான நேற்று முன்தினம் வவுனியா நகரசபை பூங்காவில் மரம் நடுகை இடம் பெற்றது. பயன்தரு மரங்கள், பழ மரங்கள் என்பன இங்கு நாட்டப்பட்டு மரநடுகை தினம் நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வில் வவுனியா உதவி பிரதேச செயலர் திருமதி எஸ்.கர்ணன், வவுனியா நகரசபைச் செயலாளர் க.சத்தியசீலன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத் தலைவர் தமிழ்மணி அகளங்கன், நகர வரியிறுப்பாளர் சங்கத் தலைவர் செ.சந்திரகுமார், சுத்தானந்த இளைஞர் சங்கத் தலைவர் சேனாதிராஜா, ஓய்வுபெற்ற அதிபர் சிவஞானம் மற்றும் ஊடகவியலாளர்கள், சமூக ஆர்வலர்கள் என பலரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு மரங்களை நாட்டினர்.

# கொரிய அரசின் நிதியுதவியுடன் கிளி.இல் 13 பாடசாலைகள் புனரமைப்பு

(கொழும்பு)

கொரிய அரசின் நிதி உதவியின் கீழ் கல்வி அமைச்சின் ஊடாக, கிளிநொச்சி பிரதேசத்தில் 13 பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளதாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆணைக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில,


கொரியக் குடியரசின் உதவியுடன் கல்வி அமைச்சு அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 13 பாடசாலைகளை புனரமைப்பு செய்துள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைமையகமாகக் காணப்பட்ட மாவட்டத்தில் அமைந்துள்ள இப்பாடசாலைகள், ஏறத்தாழ 30 வருட முரண்பாட்டின் காரணமாக பாழடைந்த நிலையில் காணப்பட்டன.

புனித தெரேசா பெண்கள் கல்லூரி, சிவநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, ஸ்ரீ பாரதி வித்தியாலயம், இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கோணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, இராமநாதபுரம் மகா வித்தியாலயம், வடக்கச்சி மகா வித்தியாலயம், பிரமந்தனாறு மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், வேரவில் இந்து மகா வித்தியாலயம், இரணைதீவு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கிராஞ்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளே இவ்வாறு புனரமைக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களுக்கான தங்குமிடங்கள், 100 வரையிலான வகுப்பறைகளைக் கொள்ளக்கூடிய கட்டடங்கள், மஹிந்தோதய தொழிநுட்ப ஆய்வுகூடங்கள் போன்ற மேலதிக வசதிகளும் சில பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பரமர் சங்கமம்



**'வெள்ளாவியில் போட்டு அவிச்சாலும் காகத்தின் கறுப்பு நிறம் மாறாது' எண்டது என்ன மொழியாகவும் இருந்திட்டுப் போகட்டும். வேணுமெண்டால் பரமமொழி எண்டேனும் சொல்லுங்கள்.**

**மொழிகள் வாய் மொழியாகவே உருவாகி எழுத்துருவம் பெற்றன. அதுபோலவே இலக்கியங்கள் நாட்டார் இயலாகத்தோன்றி வளர்ந்தன. எண்டால் எல்லாக்கலை இலக்கியங்களும் மக்களின் வாழ்வியலில் இருந்துதான் தோன்றின என்பதை எத்தனை இடங்களில் எத்தனையோ தடவைகள் விளங்கப்படுத்தப்பட்டுள்ளன.**

**1960 களில் பேராசிரியர் கைலாசபதி பேராசிரியர்.கா.சிவத்தம்பி போன்றோர் ஓரணியிலும் ரசிகமணி கனகசெந்திநாதன் சோ.இளமுருகனார் போன்றோர் இன்னொரு அணியிலும் நின்று வாதிட்டு கலை கலைக்காகவா, மக்களுக்காகவா, பாமரர் இலக்கியம் (இழிசனர் வழக்கு) பண்டித இலக்கியம் போன்ற இன்னோரன்ன விடையங்களை அக்குவேறு ஆணிவேறாக அலசி ஒரு முடிவுக்கு வந்திருந்தனர்.**

**அதில் கலை இலக்கியங்கள் மக்களிடம் இருந்து தோன்றி மக்களுக்காகச் சேவகம் செல்பவை என்ற முடிவை அடைந்தும் பொன்விழா ஆண்டையும் கடந்து முன்னேறிக்கொண்டிருக்கு இதுக்கிடேல்லை விடிய விடிய ராமன் கதை கேட்டுவிட்டு சீதைக்க ராமன் என்ன முறை எண்டு கேட்டது போல ஒருவர் கதைச்சிருக்கிறார்.**

**ஒக்ரோபர் 13 ஆம் திகதிய தினமுரசு நாளிதழில் கலைக்காக கலையை வளர்க்கும் பண்பாடு வரவேற்கத்தக்கது. பேராதனைப் பல்லைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் தெரிவிப்பாக ஒரு செய்தி வெளிவந்துள்ளது. இதைப் பாத்தா நடிகர் ரஜினிகாந்தின் நனொருதடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி எண்ட பஞ்சவசனமே நினைவுக்கு வந்தது.**

**சிலதுகளுக்கு நூறு தடவை சொன்னா ஒரு தடவை சொன்ன மாதிரித்தான். இல்லாட்டில் பேராசிரியர் 1960 களில் மாணவராக இருந்தாலும் வரலாற்றுச் செய்திகளை படிச்சுத்தானே பல்கலைக்கழகப்படிகளில் ஏறி இருக்க வேணும். சிலவேளை கண்களை மூடிக்கொண்டு பால் குடிக்கிறாரோ என்னவோ? உலகச் சக்கரம் பின்நோக்கிச் சுற்றுறேல்லை எண்டது தெரியாமலா இருக்கும்?**

**மேல் வர்க்கச் சிந்தனைகள் எப்போதும் குண்டுச் சட்டிக்கை குதிரை ஓடிக்கொண்டே இருக்கும் எண்டதுக்கு பேராசிரியர் வ.மகேஸ்வரனின் கூற்று இன்னொரு உதாரணம். இந்தக் கயித்தைப் புடிச்சுத் தொங்கவும் ஆக்கள் இருப்பினம்.**

**இண்டைய உலகப் போக்கைப் பாத்தா காகத்தை வெள்ளாவீல போட்டு அவிச்சாலும் அந்தக் கறுப்பு நிறத்தைப் போக்கேலாது எண்டமாதியெல்லே இருக்கு... சொல்லுங்க பாப்பம்...**

# சமூகத்தில் முன்னுதாரணமாக் திகழும் விழிப்புலனற்றோரின் குடும்பங்கள்

## கிளி. அரச அதிபர் பாராட்டு



(யாழ்ப்பாணம்)

விழிப்புலனற்றவர்களின் குடும்பங்கள் சமூகத்தில் முன்னுதாரண்மாக திகழுவதாக கிளிநொச்சி மாவட்ட செயலர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி நேற்று முன்தினம் கிளிநொச்சி கூட்டுறவு சங்க மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


முன்னதாக வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி கிளிநொச்சி விழிப்புலனற்றோரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றில் இருந்து கூட்டுறவு சங்க மண்டபம் வரை ஊர்வலம் இடம்பெற்றது இதில் விழிப்புலனற்றவர்கள் பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தை தொடர்ந்து கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட மாவட்ட செயலர் தனதுரையில் மேலும தெரிவித்ததாவது,

விழிப்புலனற்றவர்கள் தங்களை வாழ்வில் வளம்படுத்திக்கொண்டு சமூகத்தில் முன்னுதாரணமாக வாழ்கின்றனர் எனவே அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு அனைவரும் இணைந்து செயற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இந்த நிகழ்வில் விழிப்புலனற்றோர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# 545 பேருக்கு டெங்கு தொற்று



இம்மாதத்தின் இரண்டு வாரகாலப்பகுதியில் 545 டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணபட்டுள்ளதாக தொற்று நோய் விஞ்ஞானபிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களுள் 79 பேர் கொழும்பு நகரில் வசிப்பவர்கள் என்றும் மட்டக்குளிய- தொட்டலங்க- கோட்டை மற்றும் கறுவாத்தோட்டம் ஆகிய பிரதேசங்களிலேயே இவர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர்.

2014 ஜனவரி மாதம் தொடக்கம் ஒக்டோபர் 14ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 32451 ஆக காணப்பட்டது. அவர்களில் 10709 பேர் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

நாட்டில் தற்போது மழை பொழிவதனால் வேகமாக டெங்கு நோய் பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இதனால் வீட்டுச்சூழலையும் துப்புரவாக வைத்துக் கொள்ளுமாறும் டெங்கு பரவும் இடங்களை அடையாளங்கண்டு நடவடிக்கை எடுக்குமாறும் தொற்றுநோய் விஞ்ஞானப்பிரிவு தெரிவித்துள்ளது.

# கனடாவில் குடியுரிமையை பெறமுடியாத இலங்கைத் தமிழர்

## புலிகளுடனான தொடர்பே காரணம்

(கொழும்பு)

கனடாவில் அகதி அந்தஸ்து பெற்ற இலங்கைத் தமிழர் ஒருவர் தீர்மானமற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கோகுலரத்னம் அருளானந்தம என்ற குறித்த இலங்கையர், கனடாவில் பாதுகாப்பு விசாவை பெற்றுள்ளார்.

அதனால் அவரை இலங்கைக்கு நாடுகடத்த முடியாது. எனினும் அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச் சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே அவரால் கனடாவில் நிரந்தர குடியுரிமையை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் அவர் மீண்டும் குடிவரவுத் துறை திணைக்களத்தினால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார் என்று கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

# விஞ்ஞானபீட மாணவர்களுக்கு பட்டதாரி நியமனங்கள்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடம் முதல் விஞ்ஞான பீடத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு பட்டதாரி நியமனங்களை வழங்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

விஞ்ஞான பீடத்திலிருந்து உருவாகும் மாணவர்களுக்கு இதன் மூலம் மதிப்பு சேர்வதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உயையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப பிட்டார்.

34. இலங்கையின் தேசிய மரம் எது?
1) ஆலமரம் 2) நாகமரம் 3) அரசமரம்

35. நகரம் ஒன்றில் இருக்கக்கூடிய பொதுமக்கள் பாவனைக்கான அரசாங்கக் கட்டடம் ஒன்று பின்வருவனவற்றுள் எது?
1) பாடசாலை 2) பள்ளிவாசல் 3) புகையிரத நிலையம்

36. பூச்சி இனங்களில் அடங்காத பிராணி எது?
1) சிலந்தி 2) கரப்பான் 3) பொன்வண்டு

37. மதி எனும் கருத்தைப் புலப்படுத்தாத ஒரு சொல் எது?
1) சந்திரன் 2) அறிவு 3) கடமை

38. சிவப்பு நிறத்தையும் நீல நிறத்தையும் கலந்தால் பெறப்படும் நிறம் எது?
1) செம்மஞ்சள் 2) கருநீலம் 3) ஊதா

39. சாதாரண தபால் ஒன்றை அனுப்புவதற்குத் தேவையான முத்திரையின் பெறுமதி யாது?
1) ரூ. 4.50 2) ரூ.10.00 3) ரூ.3.50

40. பதிவுத் தபால் ஒன்றை அனுப்புவதற்குத் தேவையான முத்திரையின் பெறுமதி யாது?
1)ரூ. 20.00 2) ரூ 30.00 3) ரூ 50.00

**பின்வரும் பாடலை வாசித்தபின் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக**

நீலமான வீதியில் நீந்தும் அழகுப் புதுநிலா
பாலொளியைப் பரப்பியே பவனி வரும் திருவிழா
பாலர் பாடியாடிட பாட்டும் கதையும் கேட்டிட
பாரிலுள்ளோர் மகிழ்ந்திட பவனிவரும் முழுநிலா

41. பாடலில் கூறப்படுகின்ற காட்சி எந்த நேரத்துக்குரியது? ------------------------
42. பாடலில் பாலுக்கு ஒப்பிடப்பட்டுள்ளது எது? ------------------------
43. பாடலிலுள்ள எழுவாய் அடைமொழிச் சொல் ஒன்று எழுதுக.------------------------
44. பாட்டும் கதையும் கேட்க விருப்பமானவர் யார்? ------------------------
45. முழுநிலா பவனிவரும் நாள் எப்பெயர் கொண்டு அழைக்கப்படும்------------------------

47. 'வானம்' எனும் சொல்லுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ------------------------

**பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

48 நிலா ------------------------
49. வீதி ------------------------
50. நீலம் ------------------------

**இலங்கை வரலாற்றுடன் தொடர்புபட்டவர்கள்**



ஹிக்கடுவே சுமங்கல தேரர் | அநகாரிக தர்மபால | டி.எஸ்.சேனநாயக்க | ஈ.டபிள்யு. பெரேரா | ஆதர்.வி. தியேஸ் | சேர்.டிப். ஜயதிலக | வலிசிங்ஹ ஹரிஸ்சந்திர

பயிற்சி வினாக்களின் விடைகள் நாளை சனிக்கிழமை வெளியாகும்




**தரம் - 4 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2014**

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



* கீழ்வரும் படங்களை அவதானித்து கேட்கப்பட்ட வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ் கோடிடுக.






1. ஓர் இசைக்கருவியைக் குறிக்கும் எழுத்து
1) H 2) T 3) S
2. மிகப் பெரிய உருவத்தைக் கொண்ட மிருகம்
1) G 2) C 3) B
3 R உருவில் உள்ள தொழிலாளி அழைக்கப்படுவது
1) தச்சன் 2) கொத்தன் 3) கொல்லன்
4 இதில் குயவனைக் குறிக்கும் எழுத்து
1) F 2) N 3) M
5 எரிபொருளினால் இயங்குபவற்றை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) 1B 2) JL 3) QI
6 தளபாடங்களை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) KS 2) KH 3) NO
7. இதில் வேகமாக ஓடக்கூடிய மிருகத்தைக் குறிக்கும் எழுத்து
1) B 2) C 3) F
8. இதில் சுறுசுறுப்புக்கு உதாரணப் படுத்தக்கூடிய பிராணியைக் குறிக்கும் எழுத்து
1) A 2) D 3) G
9. பின்வருவனவற்றுள் தொழிலாளிகளை மாத்திரம் குறிக்கும் தொகுதி
1) FQR 2) MPQ 3) MNP
10. 'F' எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியின் கைத்தொழிலுக்கு தேவைப்படும் மூலப் பொருட்களைக் குறிக்கும் தொகுதி
1) களிமண்ணும், நீரும் 2) களிமண்ணும், மணலும் 3) மணலும், நீரும்
11. 'Q' எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியின் கைத்தொழிலுக்கு தேவைப்படும் பிரதான மூலப் பொருள்
1) மூங்கில் 2) பிரம்பு 3) கயிறு

12. 'R' உருவால் குறித்துக் காட்டப்பட்டுள்ள தொழிலாளியினால் தயாரிக்கப்பட்ட முடிவுப் பொருட்களைக் குறிக்கும் தொகுதி
1) KE 2) NO 3) KS

13. 'T' எழுத்தால் குறித்துக் காட்டப்பட்டுள்ள இசைக்கருவியானது ஒரு
1) நரம்புக் கருவி 2) காற்றுக் கருவி 3) கஞ்சக் கருவி

♦ கீழேயுள்ள உருக்களில் ஒரு உரு வித்தியாசமானது. அவ்வுருவைத் தெரிவு செய்து கீழ்க் கோடிடுக.

14

I II III IV V


15

I II III IV V

16


I II III IV V

17

I II III IV V

18

I II III IV V

♦ 19- 21 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருச்சோடியை அவதானித்து அதற்கு ஏற்றபடி மூன்றாவதாகத் தரப்பட்டுள்ள உருவுக்குப் பொருந்தக்கூடிய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1 2 3 4
19
20
21




♦ கட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள எழுத்துக்களையும், எண்களையும் நன்கு அவதானித்து 22- 26 வரையிலான வினாக்களில் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய செயலாற்றுக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 13 | 27 | 12 | 41 | 35 | 18 | 16 | 10 | 7 |
| P | M | A | Z | Y | N | C | F | J |

22. ஆங்கில நெடுங்கணக்கு வரிசையின் முதலாவது எழுத்தைச் சுற்றி வட்டமிடுக.
23. மிகப்பெரிய இரட்டை எண்ணைச் சுற்றி ஒரு சதுரம் வரைக.
24. மனிதன் எனும் கருத்தைத் தரும் ஆங்கில எழுத்துக்களைச் சுற்றி முக்கோணங்கள் வரைக.
25. 4 ஆம் 7 ஆம், 9 ஆம் இலக்கங்களின் கூட்டுத்தொகை யாது?
26. மேலுள்ள எண்களை ஏறுவரிசைப்படுத்தும்போது 5 ஆவதாக வரும் எண்ணை எழுதுக.

♦ பின்வரும் பந்தியை வாசித்தபின் இல 27 -30 வரையிலான வினாக்களுக்காகத் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும், பிழையாயின் ( X ) எனவும் சரியாக கூறமுடியாது எனின் (0) எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

நாம் கடற்கரைக்கு உலாவரச் சென்றோம். நான் அப்பாவின் கையைப் பிடித்தபடி கரையோரமாக நடந்தேன். கரையோரமாகப் பல சிறுவர்கள் பட்டம்விட்டு விளையாடிக் கொண்டிருந்தார்கள். அம்மா அதனைக் கண்டு எனக்கும் பட்டம் ஒன்று வாங்கித் தந்தார். இன்னும் சில சிறுவர்கள் கரையோரமாக ஓடியாடி சிப்பிகளைப் பொறுக்கிச் சேகரித்தனர்.

27. கடற்கரையோரமாக உலாவுவதற்கு நாங்கள் குடும்ப சகிதம் சென்றிருந்தோம் ( )
28. அம்மா அண்ணாவுக்குப் பட்டம் வாங்கிக் கொடுத்தார். ( )
29. சிறுவர்கள் கடலோரமாக விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். ( )
30. நான் அம்மாவின் கையைப் பிடித்தபடி நடந்தேன். ( )

**வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

31. விமலா இரவு பகலாகக் கற்றலில் ஈடுபட்டதனால் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றாள். இந்நிகழ்வுக்குப் பொருத்தமான பழமொழி.
1) நடந்த கால்தேவி 2) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3) முயற்சி திருவினையாக்கும்.

32. தான் பரீட்சையில் சித்தியடைந்த செய்தியைத் தெரிவிக்க, வீட்டுக்கு ஓடிய துசானுக்கு வெளிநாட்டிலிருந்து அவனது அப்பா வந்திருந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. துசானின் இச் சம்பவத்துக்குப் பொருத்தமான மரபுச்சொற்றொடர்
1) பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல
2) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
3) கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல

33. சீலன் பாடங்களைக் கற்பதில் மிக்க ஆர்வமுள்ளவன். ஆனால், தான் கற்றவற்றை மற்றவர்களுக்குச் சொல்லிக்கொடுப்பதில் விருப்பக் குறைந்தவன். சீலனைப் பற்றிக் கூறுவதாயின் அவன் ஒரு
1) கெட்டிக்கார மாணவன் 2) முயற்சியுள்ளவன்
3) சுயநலம் கொண்டவன்

# மக்களைத் தேடிச் சென்று சேவையாற்றவே அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் மீள்குடியேற்றத்தை ஆரம்பித்தபோது கட்டடங்கள், வீதிகள், மின்சார வசதிகள் எவையும் இருக்கவில்லை. பாடசாலைகள், வைத்தியசாலைகள் என்பன இடிந்த கட்டடங்களாகவும் அரச திணைக்களங்களின் கட்டடங்கள் செயற்பட முடியாதளவிற்கு தரைமட்டமாகவும் காணப்பட்டன. ஆனால், இன்று அனைத்தும் அதி நவீன வசதிகளுடன் மீள் நிர்மாணம் செய்யப்பட்டுள்ளன. அத்தோடு போக்குவரத்து வசதிகளும் விரைவாக செய்யப்பட்டுள்ளன. என நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்ட செயலகம் நேற்று ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரவித்தார் அங்கு அவர் மேலும் உரை யாற்றுகையில்.

ஒரு இலட்சத்து முப்பத்தையாயிரம் மக்களைக் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்திற்கு மிகவும் பிரமாண்டமான முறையில் மாவட்ட செயலகம் அமைக்கப்பட்டு இன்று மக்களிடம் கையளிக்கப்படுகின்றது.

இன்றைய நாள் இந்த மாவட்ட மக்களுக்கு ஒரு பொன் நாள். தற்போது அமைக்கப்பட்டுள்ள இந்த மாவட்ட செயலகத்தின் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்ட கட்டுமாணப் பணிகள்தான் இன்று முடிவுற்று திறக்கப்பட்டிருக்கின்றது. இதே போன்று மற்றுமொரு தொகுதியை அமைப்பதற்கான கட்டு மாணப் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த மாவட்ட செயலகம் மிகவும் பிரமாண்டமான அதி நவீன வசதிகளுடன் இங்கு அமைக்கப்படுவதற்கு நிதியுதவிகளை வழங்கிய கௌரவ பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்' அவர்களுக்கும், மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபகஷ இந்த கட்டடத் தொகுதியை திறந்து வைத்ததமைக்கும் நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம.

கிளிநொச்சி மாவட்டத்தில் அரச உத்தியோகத்தர்கள் யுத்த காலத்திலும், யுத்தத்திற்குப் பின்னரான தற்போதைய சூழலிலும் நிறைவான சேவையை செய்திருக்கின்றார்கள்.

இதன் மூலம் இந்த மாவட்டத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைத்திருக்கின்றார்கள். தொடர்ந்தும் மக்களுக்கு அர்ப்பணமான சேவையை வழங்க வேண்டும் என நான் வலியுறுத்துகின்றேன்.

எனவே, தொடர்ந்தும் எமது தேவைகளை பூர்த்தி செய்வதற்கும், எமது பிரதேசம் அபிவிருத்தியடைவதற்கும் சரியான தலைமைத்துவம் ஒன்றை ஆதரிக்க வேண்டிய பொறுப்பில நாம் இருக்கின்றோம். நாட்டை சீரழிக்கின்ற, அபிவிருத்தியை விரும்பாத, .மக்களை அவலத்தில் தள்ளுகின்ற தலைமைத்துவத்தை மக்கள் நிராகரிக்க வேண்டும். மக்களின் வாழ்வை மேம்படுத்தி பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்த வேண்டும் என்ற எண்ணக்கருவோடு செயற்படுபவர்களை மக்கள் ஆதரிக்க் வேண்டும். அவ்வாறான எண்ணக்கரு எமது மேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் காணப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமாகிய முருகேசு சந்திரகுமார் அவர்கள் மேலும் தெரிவித்தார்.

# யுத்தகால உயிரிழப்பு ஆசிரியர்களுக்கு அஞ்சலி

(முல்லைத்தீவு)

சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி, யுத்தத்தில் உயிரிழந்த ஆசிரியர்களை நினைவுகூர்ந்து முல்லைத்தீவு, கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் விசேட அஞ்சலி செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் கள்ளப்பாடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றன.

முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் உதயராணி முனீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

இதன்போது இறுதிக்கட்ட போரினால் உயிரிழந்த அனைத்து ஆசிரியர்களின் நினைவாக அவர், மெழுகுவர்த்தி ஏற்றிவைத்தார். அத்துடன், வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட வலயக்கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும் மெழுகுவர்த்திகளை ஏற்றி அஞ்சலி செலுத்தினர்.

# வறுமைக்கோட்டிற்குட்பட்ட மாணவர்களுக்கு உதவிகள்



(வவுனியா)

வவுனியா கனகராயன்குளம் வடக்கில் ஆண்டு 1 தொடக்கம் உயர்தரம்வரை கற்கும் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள 46 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பால் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பின் தலைவர் சந்திரகுமார், செயலாளர் மாணிக்கம் ஜெகன் கனகராயன்குளம் வடக்கு மாதர் சங்க தலைவி ம.உதயகுமாரி, கனகராயன்குளம் வடக்கு சமுர்த்தி சங்கத் தலைவர் வை.நிதியானந்தன், சமுர்த்தி உத்தியோகஸ்தர் சர்மிளா உட்பட பெற்றோர்கள், மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர

# சாதாரண தர பரீட்சையில் சித்தி புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பம்



கடந்த 2013 ஆண்டு நடைபெற்ற க.பொ.த. (சாதாரண) தரப் பரீட்சைக்குத்தோற்றி அப்பரீட்சையில் சித்தியடைந்து எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளாதார ரீதியில் சிரமங்களை எதிர்நோக்கும் மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் புலமைப்பரிசில்கள் வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரரின் குடும்பம் மாதாந்த வருமானம் 10 ஆயிரத்துக்கு மேற்படாமலும் 5 ஆம் ஆண்டுப் புலமைப் பரிசில் நிதி உதவியைப் பெறாதவராகவும் கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் முதற் தடவையாகத் தோற்றி க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்பதற்கான பூரண தகைமைகளைப் பூர்த்தி செய்தவராகவும் இருக்க வேண்டும.

இப் புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் கல்வி வலயம் ஒன்றுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை 100 ஆகும்.

# யாழ்.இந்து மாணவன் கொலை இரண்டு சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், இணுவில் பகுதியில் வைத்து யாழ்.இந்து கல்லூரி மாணவன் சண்முகநாதன் யதுசன் (வயது 20) கொலை செய்யப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட இருவரையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதவான் நீதிமன்ற நீதவான் சி.சதீஸ்கரன் நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

மேற்படி மாணவனின் வீட்டிற்குள் கடந்த 2013ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நுழைந்த ஆயுததாரிகள் மாணவனையும், அவனது தந்தை, தாயையும் கோடரியால் கொத்தியதுடன, வீட்டிலிருந்த பொருட்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இதில் மாணவன் உயிரிழந்ததுடன், தந்தை, தாய் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இந்நிலையில், இது தொடர்பான விசாரணைகளை முதலில் சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வந்ததுடன், மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸ் பிரிவு விசேட பொலிஸ் குழு மேற்கொண்டது.

இதன்போது, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் ஐவர் இனங்காணப்பட்டு, பொலிஸார் அவர்களை கைது செய்ய முற்பட்ட வேளையில் அவர்கள் தப்பிச் சென்று வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் தலைமறைவாக வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் சந்தேக நபர்களில் இருவர் சுழிபுரம் பகுதியில் மறைந்திருந்த வேளையில் கடந்த செவ்வாய்க் கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் 27 மற்றும் 32 வயதுடைய சகோதரர்கள் ஏனைய மூவரையும் கைது செய்யும் நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# யாழில் மின்பாவனை அதிகரிப்பால் கைத்தொழில் உற்பத்திக்கு வாய்ப்பு

## அரச அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த காலத்தினை விட 96 வீதமான வீட்டு மின்பாவணையாளர்கள் மின்சாரத்தினை பயன்படுத்துகின்றனர். இதனால் பல்வேறு கைத்தொழில் உற்பத்தி சாலைகளை நிறுவக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன என இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத்துள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கைக்கான பிரிட்டிஷ் பிரதி உயர்ஸ்தானிகர் லோரா டேவிஸ் நேற்று யாழ்.மாவ்ட்டத்திற்கு விஜயம் மேற்கொண்டு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரை யாழ்.மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

அச்சந்திப்பின் போது, அபிவிருத்தி திட்டங்கள் குறித்து மக்களின் வெளிப்பாடு எவ்வாறு அமைந்திருக்கின்றது என உயர்ஸ்தானிகர் கேள்வி எழுப்பியுள்ளார்.

புகையிரதம், மின்சாரம், நீர்ப்பாசனம், குடிநீர் போன்ற வசதிகள் தொடர்பில் அவருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. அத்துடன், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடந்த 3 தினங்கள வடமாகாணத்திற்கு வருகை தந்து, யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவையினை ஆரம்பித்து வைத்துள்ளார்.

விஸ்தரிக்கப்பட்ட புகையிரத சேவையினால், அரச ஊழியர்கள் மட்டுமன்றி, பொது மக்கள், உற்பத்தியாளர்கள் எனப் பல தரப்பட்டவர்களும் நன்மையினை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மின்சார பாவணையின் வீதம் அதிகரித்துள்ளமையினால், மின் இயலுமையும் அதிகரித்துள்ளது. அந்த வகையில், பல்வேறு கைத்தொழில் உற்பத்தி சாலைகளை நிறுவக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

அதனால் முதலீட்டாளர்களின் கைத்தொழில் உற்பத்திகளை உயர்த்துவதற்கு மின்சாரம் உதவும் எனவும் விரிவாக விளக்கமளிக்கபட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேலும் கூறினார். (25)

# வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ....................................

முகவரி :- ....................................

பிறந்த ஆண்டு :- ....................................


கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

....................................

பெற்றோர் கையொப்பம்

# குர்திஸ் -அமெரிக்க படைகளின் தாக்குதல்

# ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பின்வாங்கல்



குர்திஸ் படையும் அமெரிக்க கூட்டு படைகளும் நடத்திய தீவிர தாக்குதலால் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் பின்வாங்கி வருகிறார்கள். இன்னும் சில நாட்களில் முழு நகரையும் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவோம் என குர்திஸ் படை தளபதி கஸ்ரா நாஜித் தெரிவித்துள்ளார்.

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் மீது அமெரிக்க கூட்டு படைகள் வான்வழி தாக்குதல் நடத்தி வருகின்றனர். சிரியாவில் துருக்கி எல்லையில் கோபன் என்ற நகரம் உள்ளது. இங்கு குர்திஸ் இன மக்கள் அதிகமாக வசித்து வந்தனர்.

இந்த நகரை கைப்பற்றுவதற்காக ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகள் சில வாரங்களுக்கு முன் தாக்குதலை ஆரம்பித்துள்ளனர். அவர்கள் நடத்திய தீவிர தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் சிரிய இராணுவமும், குர்திஸ் படையும் பின்வாங்கியது.

இதனால் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் நகரின் 40 சதவீத இடத்தை கைப்பற்றினார்கள். எந்த நேரத்திலும் முழு நகரமும் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் கட்டுப்பாட்டில் வந்து விடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதை தடுக்க அமெரிக்காவும், மற்ற நாட்டு கூட்டுப்படைகளும் தொடர்ந்து குண்டு வீசிவந்தன. ஆனால் உரிய பலன் இல்லாமல் இருந்தது.


நேற்றுமுன்தினம் போர் முறையில் மாற்றம் செய்து அமெரிக்கா அடுத்தடுத்து சரமாரியாக குண்டுகளை வீசியது. 18 தடவை அதிரடியாக குண்டு வீச்சு நடந்தது. அதே நேரத்தில் குர்தீஸ் படையினர் ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளை எதிர்த்து தரைவழியில் போரிட்டார்கள். அதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது.

தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் அங்கிருந்து பின்வாங்கினார்கள். இப்போது 20 சதவீத பகுதி மட்டுமே ஐ.எஸ். ஐ.எஸ். படையிடம் உள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சண்டையில் மட்டும் நூற்றுக்கணக்கான ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே அமெரிக்க அதிபர் ஒபாமா நேற்றுமுன்தினம் இங்கிலாந்து பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, பிரதமர் மற்றும் அதிபர்களுடன் வீடியோ கான்பரன்ஸ் மூலம் ஆலோசனை நடத்தினார். அப்போது தீவிரவாதிகள் மீது தாக்குதலை இன்னும் அதிகப்படுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டது.

# மூன்றாவது செய்மதியை விண்ணுக்கு வெற்றிகரமாக ஏவியது இந்தியா



கடல்வழிப்பாதை மற்றும் அனர்த்த விடயங்கள் உள்ளிட்ட பணிகளுக்காக பயன்படுத்தப்படும் மூன்றாவது செய்மதியை இந்தியா வெற்றிகரமாக விண்ணுக்கு ஏவியுள்ளது.

ஆந்திர மாநிலம் சிறிகரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து நேற்று அதிகாலை இந்த செய் மதி விண்ணுக்கு ஏவப்பட்டதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

சொந்த கண்காணிப்பு கட்டமைப்பொன்றை நிறுவும் நடவடிக்கையின் ஓர் படியாக இந்தியா இந்த செய்மதியை ஏவியுள்ளது.

ஆயிரத்து 425.4 கிலோகிராம் நிறைகொண்ட இந்த செய்மதி வெற்றிகரமாக விண்வெளி ஒழுக்கில் நிலைநிறுத்தப்பட்டதாக இந்திய விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 10 ஆம் திகதி இந்த செய்மதி ஏவப்படவிருந்த போதிலும் சில தொழில்நுட்பக் காரணங்களுக்காக அது பிற்போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.ஆர்.என்.எஸ்.எஸ்.-1சி செயற்கைக்கோளுடன் பி.எஸ்.எல்.வி சி.26 ரொக்கெட் வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டதை அடுத்து இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# நீதிபதி குன்ஹாவை விமர்சித்து துண்டுப்பிரசுரம் ஒட்டிய நபர் கைது




ஜெயலலிதா வழக்கில் ஆஜரான நீதிபதி மைக்கேல் குன்ஹாவை விமர்சித்து துண்டுப்பிரசுரம் ஒட்டிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சொத்துக்குவிப்பு வழக்கில் அ.தி.மு.க பொதுச்செயலாளர் ஜெயலலிதாவுக்கு பெங்களூர் சிறப்பு நீதிமன்றம் நான்காண்டு சிறைத் தண்டனை, ரூ.100 கோடி அபராதம் விதித்துள்ளது.

இதனையடுத்து எங்கு பார்த்தாலும் துண்டுப்பிரசுரம் ஒட்டி ஜெயலலிதாவுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடைபெற்றன.

குறிப்பாக நீதிபதி மைக்கேல் குன்ஹாவை விமர்சித்து ஒட்டப்பட்ட துண்டுப்பிரசுரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தின. ஒட்டியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி சென்னை நீதிமன்றம் அதிரடி உத்தரவு பிறப்பித்தது.

இதனையடுத்து கடலூர் மாவட்டம் ஆவினகுடி பகுதியை சேர்ந்த சட்டத்தரணி டி.தங்க கொளஞ்சிநாதன் (வயது-50) என்பவர் துண்டுப்பிரசுரம் ஒட்டிய குற்றத்திற்காக கைது செய்யப்பட்டுள்ளார், இதன்பிறகு பிணையில் தங்ககொஞ்சிநாதன் வெளியில் வந்துள்ளார்.

இவர் ஒட்டியிருந்த துண்டுப்பிரசுரம், நீதி தோற்றது, அநீதி வென்றது என்று தலைப்பை போட்டு, கருணாநிதி, சுப்பிரமணியம் சுவாமி ஆகியோரது சூழ்ச்சிக்கு உடன்பட்டு தர்மத்திற்கு தண்டனை அளித்திட்ட சட்டம் தெரியாத நீதிபதி, கன்னட மொழி வெறிபிடித்த மைக்கேல் டி குன்ஹா என்பது உட்பட மரியாதை குறைவான வார்த்தைகள் இருந்தது.

# நேபாளத்தில் ஏற்பட்ட பனிச்சரிவு 30 பேர் பலி, 80 பேரை தேடும் பணி தீவிரம்



நேபாள நாட்டில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 30 பேர் இறந்தனர். 80இற்கும் மேற்பட்டோரை தேடும் பணி நடைபெற்று வருகின்றது. இதன்போது பலியானவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

நேபாள நாட்டில் சமீப காலமாக பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. இந்நிலையில் இமயமலை ஒட்டிய அன்னபூர்னா என்ற பகுதியில் பனிப்பாறைகள் சரிந்து விழுந்தது. இதில் யாத்திரை சென்ற பக்தர்கள், சுற்றுலா பயணிகள் பலர் பலியாயினர். 30 பேர் வரை இறந்திருக்கலாம் என உறுதி செய்யப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. 80 இற்கும் மேற்பட்டோரை தேடும் பணியில் மீட்பு அணியினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடும் பனிப்பொழிவு இருப்பதால் மீட்பு பணி தாமதப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## உலகச் செய்திகள்

# வட,- தென் கொரிய இராணுவ அதிகாரிகள் 7 ஆண்டுகளுக்குப் பின் பேச்சு நடாத்தினர்

7 ஆண்டுகளுக்குப் பின் நேற்றுமுன்தினம் வடகொரியா மற்றும் தென் கொரியாவின் இராணுவ ஜெனரல்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை நடைபெற்றதாக தென் கொரியாவின் 'யான்ஹாப்' செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இரு நாடுகளின் இராணுவ ஜெனரல்களும் இதற்கு முன் கடந்த 2007 ஆம் ஆண்டு டிசம்பரில் சந்தித்துப்பேசினர். இந்நிலையில் நேற்றுமுன்தினம் சந்திப்பு இருநாடுகளின் எல்லையில் உள்ள பன்முன்ஜோம் என்ற கிராமத்தில் நடைபெற்றுள்ளது.

எனினும் இந்த செய்தியை தென்கொரிய அதிகாரிகள் உறுதிசெய்ய மறுத்துவிட்டனர். தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சக செய்தித் தொடர்பாளர் பார்க் சூ ஜின் கூறும்போது, 'தற்போதைய சூழ்நிலையில் இதுபோன்ற தகவல்களை நாங்கள் உறுதி செய்ய முடியாது. பிற விடயங்களையும் நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது' என்றார்.

இந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணிக்கு நடந்ததாகவும் ஆனால் இதை வெளிப்படையாக அறிவிக்க வடகொரியா விரும்பவில்லை என்றும் அந்நாட்டு துணை இராணுவப்படை வட்டாரங்கள் கூறியதாக யான்ஹாப் மேலும் தெரிவித்துள்ளது.

தென்கொரிய் இராணுவ வட்டாரங்கள் கூறும் போது, 'சமீப காலத்தில் இரு நாடுகள் இடையே போர் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், பதற்றத்தை தணிப்பதற்காக இப்பேச்சு வார்த்தை நடைபெற்றது' என தெரிவித்தள்ளதுடன் கடந்த 7 ஆம் திகதி இரு நாடுகளின் கடற்படை வீரர்கள் ரோந்து வந்த போது, துப்பாக்கியால் சுட்டு மோதிக்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# எல்லையில் தாக்குதலை நிறுத்த வேண்டும் இந்தியா, பாகிஸ்தானிடம் சீனா வேண்டுகோள்



(பீஜிங்)

காஷ்மீரில் எல்லை கட்டுப்பாட்டுக்கோடு பகுதியில் பாகிஸ்தான் கடந்த முதலாம் திகதி முதல், போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு இந்தியா தக்கபதிலடி கொடுத்து வருகின்றது. இதனால் எல்லையில் பதற்றம் தொடர்கிறது.

இந்த நிலையில் பீஜிங்கில் நேற்றுமுன்தினம் சீன வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் ஹாங் லீயிடம், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே எல்லையில் நடந்து வரும் தாக்குதல்கள் குறித்து நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், இதை சீனா மிகவும் உன்னிப்புடன் கவனித்து வருகிறது. அண்டை நாட்டினர் என்பதோடு மட்டுமல்லாமல், இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளின் நட்பு நாடு என்ற வகையில் சொல்கிறோம். இரு தரப்பும் கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். தாக்குதல்களை நிறுத்த வேண்டும். பேச்சு வார்த்தை நடத்த வேண்டும். தெற்காசியாவில் அமைதி, ஸ்திரத்தன்மை, முன்னேற்றம் ஏற்பட இரு நாடுகளும் கூட்டாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

# பொன்சேகாவுக்கு தடை; தேர்தலில் போட்டியிட முடியாது

ஜனநாயகக் கட்சியின் தலைவரும், முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகாவுக்கு தேர்தல்களில் போட்டியிட முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விளக்கம் மற்றும் அறிவித்தலை சட்டமா அதிபர் அலுவலகம் மூலம் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் குறித்து ஜனநாயகக் கட்சியின் செயலாளர் சுனில் மானவடுவுக்கு நேற்று மாலை தேர்தல் ஆணையாளர் தெரியப்படுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவுக்கு மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பான வழக்கு மற்றும் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பு என்பவற்றின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சட்ட மா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவித்தல் கிடைத்தவுடன் சரத் பொன்சேகா உடனடியாக தனக்கு நெருக்கமானவர்களுடன் முக்கிய ஆலோசனையொன்றில் நேற்று இரவு ஈடுபட்டார்.

பெரும்பாலும் இன்று அவர் இது தொடர்பில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தி, இது தொடர்பில் விளக்கமளிக்கக் கூடும் என்று அவரது கட்சியின தகவல் வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன.

வெள்ளைக் கொடி விவகாரம் தொடர்பான வழக்கில் மூன்று வருட சிறைத்தண்டனையும், அதற்கு முன்னர் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பின் பிரகாரம் அவருக்கு 30 மாதங்கள் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்ப்புகளின் காரணமாக சுமார் மூன்று வருடங்கள் சரத் பொன்சேகா சிறைத்தண்டனையை அனுபவித்திருந்தார். எனினும் அவரது சிறைத்தண்டனை முடிவடைவதற்கு இரண்டு மாதங்கள் இருக்கையில் அரசியலமைப்பின் 34ஆவது பிரிவின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுமன்னிப்பின் கீழ் சரத் பொன்சேகாவை விடுதலை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் தற்போது சட்டமா அதிபர் திணைக்களம் பொன்சேகா தேர்தல்களில் போட்டியிட முடியாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கும் கால எல்லை எது வரை நீடிக்கும் என்பது பற்றியோ அல்லது இந்த தடைக்கான சட்ட ரீதியான வியாக்கியானத்தையோ சட்டமா அதிபர் திணைக்களம் இதுவரை வெளியிடவில்லை.

# புதிய அமைச்சரவை ஊவாவில் பதவி பிரமாணம்



ஊவா மாகாண சபையின் புதிய அமைச்சரவை அமைச்சர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டனர்.

ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது ஊவா மாகாண சபையின் புதிய அமைச்சர்களாக ஜனாதிபதி முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டவர்களின் விபரம் வருமாறு,

சசேந்திர ராஜபக்ஷ - நிதி திட்டமிடல், கல்வி, உள்ளூராட்சி, காணி, கலாசாரம், சமூக சேவைகள், கிராமிய பொது வசதிகள் அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர். அனுர ரவீந்திர விதான கமகே - விவசாய, நீர்ப்பாசன, கால்நடை, நன்னீர் மீன் வளர்ப்பு, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர். ஆர்.எம்.குமாரசிறி ரத்நாயக்க - சுகாதாரம், சுதேச வைத்தியத்துறை, நன்னடத்தை சிறுவர் பாதுகாப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சர். செந்தில் தொண்டமான் - பெருந்தெருக்கள் அபிவிருத்தி, வீடமைப்பு ,நீர்வளங்கள் மற்றும் வடிகால் அமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர். சாமர சம்பத் தசநாயக்க- விளையாட்டு, இளைஞர் விவகார மின்சக்தி எரிசக்தி புடவைக் கைத்தொழில் மற்றும் சிறு கைத்தொழில் கூட்டுறவுத்துறை அமைச்சர். புதிய அமைச்சர்கள் ஜனாதிபதியின் முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர் ஜனாதிபதியுடன் குழுப்படமும் எடுத்துக் கொண்டனர்.

# யாழ். சின்னக்கடையில் கஞ்சாபொதியுடன் ஒருவர் கைது

கஞ்சா பொதிகள் 18 வைத்திருந்த நபர் ஒருவரை யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று கைது செய்துள்ளனர்.

யாழ்.சின்னக்கடை பகுதியில் உள்ள வீடொன்றில் தனது உடமையில் இந்த பொதிகளை வைத்திருந்துள்ளார். யாழ்ப்பாணம் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் குறித்த நபரின் வீட்டில் பொலிஸார் சோதனை மேற்கொண்டனர்.

பரிசோதனையின் போது, 18 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. 18 பொதிகளும் சுமார் 9 ஆயிரம் ரூபா பெறுமதியானதென்றும், கைதுசெய்யப்பட்ட நபரை யாழ்.நீதவான் நீதமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (25)

# முல்லையில் வீதிகள் புனரமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமப்புறங்களில் உள்ள வீதிகளை உடனடியாக புனரமைப்பதற்கு நட்வடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாக ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளரான எஸ்.கனகரத்தினம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரசாங்கம் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துள்ளமையை பாராட்டும் மக்கள், கிராமப்புறங்களில் காணப்படும் உள்வீதிகளையும் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணீரூற்று, குமுழமுனை ஊடாக அளம்பில் செல்லும் சுமார் 20 கிலோமீற்றர் வரையிலான வீதி, துணுக்காய், கந்தபுரம் வரையிலான வீதி, வன்னிவிளான் நட்டான்கண்டல் வரையிலான வீதி, துணுக்காய் முதல் நட்டான்கண்டல் ஊடாக வவுனியா செல்லும் வீதி உள்ளிட்ட இன்னும் சில வீதிகளும் புனரமைக்கப்படவில்லை.

எனவே, இதனை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# வடக்கில் வாக்கு வேட்டைக்கு தயாராகிவிட்டது அரசு

## ஐ.தே.கட்சி சாடுகிறது

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்கு கொள்ளையில் ஈடுபட முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியல்ல குற்றம் சுமத்தியுள்ளார்.

இதன் ஒரு கட்டமாக வட மாகாணத்தில் மக்களின் வாக்குகளை கொள்ளையிடுவதற்கான கபட நோக்கம் கொண்ட முயற்சிகளை அரசாங்கம் எடுத்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதன் காரணமாகவே வடக்கிற்கு பயணம் செய்யும் வெளிநாட்டவர்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில் பக்கச்சார்பற்ற வகையில் கண்காணிப்பு செய்ய அரசாங்கம் இடமளிக்காது.

கண்காணிப்பாளர்கள் மற்றும் வெளிநபர்கள் வடக்கிற்கு பிரவேசிப்பதற்கு தடை விதித்து வாக்கு கொள்ளையில் ஈடுபட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

**அரசுடன்...**

எக்ஸ்பிரஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள கட்டுரை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

30 வருடங்களாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவ்டைந்துவிட்டது.

இது இலங்கையில் சுமுகமான சூழ்நிலை ஒன்றை உருவாக்கி இருக்கின்றதுடன், பொருளாதார அபிவிருத்திக்கும் சிறந்த பங்களிப்பை வழங்கி வருகிறது. எனினும் யுத்த நிறைவு மாத்திரம் நிரந்தர தீர்வை வழங்கும் என்று கூற முடியாது.

இதற்காக அரசியல் மற்றும் சமூக ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் இருக்கின்றன.

நிலையான அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதினை, இலங்கை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகளுக்கும் இந்த விடயத்தில் மிகப்பெரிய பொறுப்புகள் எஞ்சி இருப்பதாக அந்த இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

**பறங்கி...**

விஜயம் செய்த ஜனாதிப்தி, மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தினை தலைமை தாங்கி நடத்தினார்.

இதன்போது வடமாகாணத்தில் உள்ள யாழ்., கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய ஐந்து மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலும் மாவட்டத்தினுடைய களநிலைவரங்கள் பற்றியும் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய அபிவிருத்தி பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டது. மாந்தை கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட பறங்கியாற்று நீரை மறித்து வவுனின்குளம் மற்றும் ஏனைய குளங்களுக்கு நீரை வழங்குவதற்கு உதவுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்திருந்தேன்.

இதுதொடர்பான கோரிக்கையொன்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான றிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக்,ஆகியோரிடம் விடுத்திருக்கிறேன். இதன்போது அமைச்சர் றிசாத் பதியுதீனும், ஹுனைஸ் பாருக் எம்.பி.யும், பறங்கியாற்று திட்டம் தொடர்பில் ஜனாதிபதிக்கு விரிவான விளக்கங்களை வழங்கினார்கள்.

குறித்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, திட்டம் தொடர்பில் ஆய்வு செய்து விரைவில் அறிக்கையொன்றை சமர்ப்பிககுமாறு உரிய திணைக்கள அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

**கொழும்பு...**

வளைவை அண்மித்தபோது இலக்கத்தகடற்ற மோட்டார் சைக்கிளில் திடீரென வந்த இருவர் பஸ் மீது கல்லினால் சரமாரியாகத தாக்கினர்.

இதனால் பஸ்ஸின் கண்ணாடி முற்றாக சேதமடைந்தது.

இதனைத் தொடர்ந்து பஸ் சாரதி யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி பஸ் அண்மையில் டிப்போக்களுக்கு புதிதாக கையளிக்கப்பட்ட பஸ்களில் ஒன்று எனத் தெரியவருகிறது. (25)

**புலிகளின்...**

ளையும் தகவல்களையும் வழங்கத் தயார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் தொடர்பில் ஐரோப்பிய நாடுகள் விசாரணை செய்து வருவதாகக் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சு சில உறுப்பு நாடுகளில் இன்னமும் விசாரணைகள் நடத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவில் பெரும் எண்ணிக்கையிலான இலங்கையர்கள் வாழ்ந்து வருவதாகவும் புலிகளுக்கு எதிரான தடையை நீக்க எடுத்தத் தீர்மானம், அங்கு வாழும் இலங்கையர்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதுடன், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமையக் கூடுமென குறிப்பிட்டுள்ளது.

**இந்திய...**

உள்ளிட்ட நாடுகளுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

பூட்டான், நேபாளம், பங்களாதேஷ், மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுக்கு ஜெனரல் தால்பீர் அனேகமாக விஜயம் செய்ய உள்ளார். பூட்டான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளுக்கு ஜெனரல் தால்பீர் இந்த ஆண்டிலேயே விஜயம் செய்வார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

**வடக்கு...**

அதிவேக பெருந்தெருக்கள் பணி ஆரம்பிக்கப்பட இருக்கிறது. ஆரம்பத்தில் கொழும்பு - கண்டி பாதையே நிர்மாணிக்கப்பட இருந்தது. ஜனாதிபதியின் ஆலோசனைப்படி வடக்கிற்கான அதிவேகப்பாதை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதன்படி வெளிச் சுற்றுவட்ட வீதியில் எடேரமுல்லையில் இருந்து -தம்புள்ள வரை முதற் கட்டத்தின் கீழ் பாதை நிர்மாணிக்கப்படும். பொதுஹரையில் இருந்து ரம்புக்கனை, கலகெதர. ஊடாக கன்னொருவவரை கண்டி வரையான நெடுஞ்சாலை அமைக்கப்படும். மொததமாக 154 கிலோ மீற்றர் தூர நெடுஞ்சாலை உருவாக்கப்பட உள்ளதோடு காணி சுவீகரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன. தேர்தல் நோக்கத்தில் இந்தக் காலத்தில் நெடுஞ்சாலை அமைக்க திட்டமிடப்படவில்லை இது ஏற்கனவே திட்டமிடப்பட்டதாகும் என்றார்.

அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிரி குறிப்பிட்டதாவது, இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தங்கள் உள்நாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கே வழங்கப்படுவதோடு ஒரு பகுதி சீன கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. முதலில் 4 வழிப்பாதையாக அமைக்கப்பட்டு அடுத்து ஆறு வழிப்பாதையாக அதிகரிக்கப்படும். தம்புள்ள வரையான பாதை அதிக வாகன நெரிசல் கொண்டது. அங்கு செல்ல கூடுதல் நேரம் பிடிக்கிறது.

நெடுஞ்சாலை அமைக்கப்பட்ட பின்னர் இது ஒன்றேகால் மணித்தியாலமாக குறையும்.இந்தத் திட்டத்தினூடாக குருணாகல், கேகாலை, மாத்தளை, கண்டி, அநுராதபுரம், பொலன்நறுவை, திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் 3/4 பகுதி மக்கள் பயனடைய உள்ளனர். மக்களின் தேவை உணர்ந்தே இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எதிர்கால சனத்தொகை அதிகரிப்பு, வாகன அதிகரிப்பு என்பவற்றுக்கு முகம் கொடுக்க இந்த திட்டங்கள் வாய்ப்பாக அமையும். ஏனைய நெடுஞ்சாலைகள் போலன்றி மக்களுக்கு குறைந்த தூரத்தில் இலகுவாக நெடுஞ்சாலையை பயன்படுத்தும் வகையில் வடக்கு நெடுஞ்சாலை உருவாக்கப்படும் என்றார்.

திட்டப் பணிப்பாளர் வீரகோன் குறிப்பிட்டதாவது,இந்தத் திட்டத்திற்காக 6819 ஏக்கர் காணி சுவீகரிக்கப்படும். 1243 வீடுகள் பாதியளவு அல்லது முழுமையாக அகற்றப்பட உள்ளன. இந்தத் திட்டத்திற்கு உள்நாட்டு நிதியும் வெளிநாட்டு கடனும் பயன்படுத்தப்படும் என்றார்.

## யாழ்-கொழும்பு ரயில் சேவையின் இருநாள் வருமானம் 10 இலட்சம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புகையிரத சேவை ஆரம்பமாகி இரு தினங்கள் முடிவடைந்த நிலையில் புகையிரத திணைக்களத்திற்கு பயணச்சீட்டு வருமானமாக 10 இலட்சம் ரூபா வரை பெறப்பட்டுள்ளதாக பிரதான புகையிரத நிலைய அதிபர் நா.தவானந்தன் தெரிவித்தார்.

கடந்த 13 ஆம் திகதி சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் மறுநாள் பயணிகளுக்கான சேவைகள் ஆரம்பமாகின. கடந்த 14 ஆம் திகதியன்று 3, 26, 220 ரூபா வருமானமாகப் பெறப்பட்டுள்ளதுடன், மறுநாளான நேற்று முன்தினம் 6, 54, 305 ரூபா பயணச்சீட்டு வருமானம் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் புகையிரத திணைக்களத்திற்கு யாழ். புகையிரத நிலையத்தின் ஊடாக வருமானமாக இரு தினங்களில் 9, 80, 505 ரூபா கிடைத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ, 25)

## கொழும்பு ரயில் ஆசனப் பதிவுக்கு குடாநாட்டு பயணிகள் ஆர்வம்


(யாழ்ப்பாணம்)

கொழும்பு செல்லும் புகையிரதத்திற்கு ஆசனப் பதிவுகளை மேற்கொள்ள மக்கள் முண்டியடித்துக் கொண்டு சென்றாலும் ஆசனங்கள் கிடைப்பது அரிதாக உள்ளதாக பயணிகள் பலரும் நேற்றுக் கவலை வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்திற்கான புகையிரத சேவை ஆரம்பமான நிலையில் தற்போது பயணிகள் பெருமளவில் புகையிரத சேவைகளை நாடிய நிலையில் தற்போது ஆசனப் பதிவு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் ஆசனங்களுக்கான பதிவுகள் முடிவடைந்துள்ளதால் சாதாரண பயணச்சீட்டையே பெறவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது சேவையின் ஆரம்ப காலம் என்பதால் பயணிகள் அதிகளவில் செல்வதால் ஆசனப் பதிவில் ஆசனங்கள் கிடைப்பது பெரும் சிரமமான காரியமே என புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

எனினும் நேற்றும் ஆசனப் பதிவு மேற்கொள்ள பெருமளவானோர் வரிசையில் நின்றிருந்தனர்.



இதேநேரம் யாழ்.- கொழும்புக்கான இரவு நேர பலூன் பஸ் சேவையிலும் பயணிகள் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாடு தழுவிய சுனாமி ஒத்திகை எதிர்வரும் 23

நாடளாவிய ரீதியில் அனர்த்தம் தொடர்பான ஒத்திகை பயிற்சி எதிர்வரும் 23 ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

14 கரையோர மாவட்டங்களில் சுனாமி ஒத்திகை பயிற்சியும் நிலச்சரிவு ஏற்படும் மாவட்டங்களில் நிலச்சரிவிற்கான ஒத்திகை பயிற்சியும் வெள்ளப் பெருக்கு ஏற்படும் மாவட்டங்களில் வெள்ளப் பெருக்குக்கான ஒத்திகை பயிற்சியும் இடம் பெறவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் இம்முறை வல்வெட்டித்துறை பிரதேசத்தின் ஜே/388, ஜே/391 கிராம சேவையாளர் பிரிவுகளுக்கான சுனாமி முன்னொத்திகை மற்றும் பயிற்சி வல்வெட்டித்துறை தெருவில் விளையாட்டு மைதானத்தில் பி.ப 3.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

## துப்புரவு பணியின் போது கிணற்றில் கைக்குண்டு மீட்பு

(வவுனியா)

வவுனியா, கோவில் சின்னப் புதுக்குளம், 2ஆம் ஒழுங்கையில் உள்ள வெற்றுக் காணி ஒன்றின் கிணற்றில் இருந்து கைக்குண்டு ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கோவில் சின்னப் புதுக்குளம், 2ஆம் ஒழுங்கையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான காணியை பல வருடங்களுக்கு பின்னர் குடியேறுவதற்காக துப்புரவு செய்து கிணற்றின் சேற்றை அள்ளிய போது அதில் கைக்குண்டு ஒன்று காணப்பட்டுள்ளது.

இதனையடுத்து கிணற்றைத் துப்புரவு செய்தவர்கள் 119 இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிஸார் அதனை மீட்டுள்ளனர்.

இரவு நேரமாகியதால் குண்டு மீட்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் இன்று விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் அந்தக் குண்டு செயலிழக்கச் செய்யப்படும் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பண்.பிரான்பற்றில் சர்வதேச முதியோர் விழா

(வலிகாமம்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலகமும், சண்டிலிப்பாய் பிரதேச முதியோர் பேரவையும் இணைந்து நடாத்தும் சர்வதேச முதியோர், மாற்றுவலுவுடையோர் தின விழா நாளை காலை 11.30 மணிக்கு பிரான்பற்று, பண்டத்தரிப்பு அருள முதீஸ்வரி கலா பவானந்தசுரபி திருமண மண்டபத்தில் வலிகாமம் தென்மேற்கு பிரதேச செயலர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் நடைபெறும்.

பிரான்பற்று பெரியவளவு முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் சிவப்பிரம்மஸ்ரீ நித்திய சிவானந்தக் குருக்களும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி முதல்வர் வணபிதா. ஜே.ஏ.யேசுதாசன் அடிகளாரும், கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டு ஆசியுரைகளை வழங்குவர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட செயலக பிரதம கணக்காய்வாளர் திருமதி. இராஜேஸ்வரி உதயகுமார், வலிகாமம் வலி.வடக்கு பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன், ஓய்வுநிலை யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் ஆ. ஞானவேல், யாழ்.மாவட்ட சமூக சேவைகள் அலுவலர் வ.செல்வம் மற்றும் சமுதாய மட்டத்திலான புனர்வாழ்வு செயற்திட்ட மாகாண இணைப்பாளர் வ. சுரேஸ்குமார் பங்கேற்கின்றனர்.

பிரதம விருந்தினர்களாக முதியோர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் சுவிந்த எஸ்.சிங்கபுலி, வடமாகாண சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (90)

ஜனாதிபதி மகிந்தவுக்கு

## அமைச்சர் தொண்டமான் நிபந்தனையற்ற ஆதரவு

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்புக்கு தமது நிபந்தனையற்ற ஆதரவை வழங்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன் வந்துள்ளது

இந்தத் தகவலை ஜனாதிபதியின் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இந்த ஆதரவுச் செய்தியை தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் பெருந்தோட்ட மக்களுக்கு, ஜனாதிபதி செய்துள்ள மகத்தான சேவைகளுக்கு நன்றிகளையும் தெரிவித்துக்கொண்டார்.

இதேவேளை ஆறுமுகன் தொண்டமானின் மருமகனான செந்தில் தொண்டமான் நேற்று ஊவா மாகாணத்துக்கான பொறுப்புமிக்க அமைச்சராக நியமனம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## கிராம அலுவலர்களுக்கு யாழ்ப்பாணத்தில் பயிற்சி



(யாழ்ப்பாணம்)

கிராம அலுவலர்களுக்கான பயிற்சிகள் நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் ஆரம்பமானது.

கிராம அலுவலர் பயிலுனர் நியமனம் பெற்றவர்களுக்கான பயிற்சி நெறியே இடம்பெறும் இப் பயிற்சி மூன்று மாதங்களுக்கு இடம்பெறும். இப் பயிற்சி முதல் பத்து நாட்கள் மாவட்ட செயலகத்திலும், மிகுதி பயிற்சிகள் அவரவர்களின் பிரதேச செயலகங்களிலும் இடம் பெறும்.

இப்பயிற்சியின் பின்னர் நிரந்தர நியமனம் இவ்வலுவலர்களுக்கு. வழங்கப்படவுள்ளது.

ஆரம்ப நாள் நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம், நல்லூர் பிரதேச செயலாளர் பா.செந்தில்நந்தனன் மற்றும் பயிலுனர் கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நடைபாதையில் புடவை வியாபாரம்

### பதின்நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் அனுமதியற்ற முறையிலும், மக்களுக்கு இடையூறான முறையிலும் நடை பாதையில் புடவை வியாபாரம் செய்த 14 பேர் யாழ். சமூக விரோத செயல் தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் விற்பனைக்காக வைத்திருந்த உடு புடவைகளும் கைப்பற்றப்பட்டன.

யாழ்.முனீஸ்வரன் வீதியில் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் வீதியில் வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இப் பதின்னான்கு பேரும் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று யாழ். நீதி மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ,25)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் உளவள கண்காட்சி



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் உளவளத்துறையினால் யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தில் உளவளம் சம்பந்தமான மூன்று நாள் கண்காட்சி நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஒக்ரோபர் 10 உளவள தினத்தினை முன்னிட்டு இந்தக் கண்காட்சி ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதாக யாழ்.பல்கலைக்கழக உளவியல் துறைத் தலைவர் கலாநிதி ஐ.கஜவத்தன் தெரிவித்துள்ளார்.

தினமும் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 4.00 மணி வரை நடைபெற்று வருகின்ற இந்தக் கண்காட்சியின் இறுதித் தினம் இன்றாகும்.

பார்வையிடத் தவறியவர்கள் இன்று கண்காட்சியினைப் பார்வையிட முடியுமென்று தெரிவித்ததார். இந்தக் கண்காட்சியைப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், உளவளத்துறையினர், உளநல ஆர்வலர்கள், ஆசிரியர்கள் முதலானவர்கள் பார்வையிட்டு வருகின்றனர். (பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.